சற்குருப்யோ நம:.

தாண்டவ ராய சுவாமிகள்

அருளிச் செய்த

கைவல்ய நவநீதம்.

இது

திருப்பூவண மடாதிபதி

ஸ்ரீ காசிகாநந்த

ஞாநாசார்ய சுவாமிகளாலும்

ஸ்ரீ. க. சிவ. மடாலயம் குருசுவாமிகளாலும்

அச்சியற்றப் பெற்றது.

சென்னை,

ஆர்யகலா அச்சுக்கூடம்.

1923.

சற்குருப்யோ நம:

கைவல்ய நவநீதம்.

MADURA TAMILSA

பாயிரம்.

பொன்னில மாத ராசை பொருந்தினா
பொருந்தா ருள்ளம், தன்னிலந் தரத்திற்
சீவ சாட்சிமாத் திரமாய் நிற்கும், எங்கிலங்
களினுமிக்க வெழுநில மவற்றின் மேலாம்,
நன்னுல மருவு மேக நாயகன் பதங்கள்
போற்றி. 1

ஈன்றளித் தழிக்குஞ் செய்கைக் கேது
வா மயனாய் மாலாய், ஆன்றவீ சனுமாய்த்
தானே யநந்தமூர்த் தியுமாய் நிற்கும், பூன்
ற முத் தனுமா யின்பப் புணரியா தவனாய்
நாளும், தோன்றிய விமல போத சொரூப
த்தைப் பணிகின் றேனே. 2

எவருடை யருளால் யானே யெங்குமா
ம் பிரம மென்பால், கவருடைப் புவன மெல்
லாங் கற்பித மென்ற றிந்து, சுவரிடை வெ
ளிபோல் யானென் சொரூபசு பாவ மானே
ன், அவருடைப் பதும பாத மநுதினம் பணி
கின்றேனே. 3

என்னுடை மந்த புத்தி யிந்திய சரீர
மெல்லாம், என்னுடை யறிவி னாலே யிரவி
முன் னிமமே யாக்கி, என்னுடை நீயு நா
னுமேகமென் றைக்கியஞ் செய்ய, என்னு
டைக் குருவாய்த் தோன்று மீசனை யிறை
ஞ்சி னேனே. 4

அந்தமு நடுவு மின்றி யாதியு மின்றி
வான்போல், சந்தத மொளிரு ஞான சற்குரு
பாதம் போற்றிப், பந்தமும் வீடுங் காட்டப்
பரந்தநூல் பார்க்க மாட்டா, மந்தரு முண
ருமாறு வத்துதத் துவஞ்சொல் வேனே. 5

படர்ந்தவே தாந்த மென்னும் பாற்கட
ன் மொண்டு முன்னூற், குடங்களி னிறை
த்து வைத்தார்கு ரவர்க ளெல்லாங் காய்ச்
சிக், கடைந்தெடுத் தளித்தே னிந்தக் கை
வல்ய நவநீ தத்தை அடைந்தவர் விடய
மண்டிண் றலைவரோ பசியிலாரே. 6

முத்தனை வேங்க டேச முகுந்தனை யெ
னையாட் கொண்ட, கர்த்தனை வணங்கிச் சொ
ல்லுங் கைவல்ய நவநீதத்தைத், தத்துவ
விளக்க மென் றுஞ் சந்தேகந் தெளித லென்
றும், வைத்திரு படல மாக வகுத்துரை செ
ய்கின்றேனே. பாயிர முற்றிற்று.

தத்துவ விளக்கப் படலம்.

நித்திய வநித்தி யங்கணிண்ணயந் தெ
ரிவி வேகம், மத்திய விகப ரங்கள் வருபோ
கங் களினி ராசை, சத்திய முரைக்க வேண்
டுஞ் சமாதியென் ருறு கூட்டம் முத்தியை
விரும்பு மிச்சை மொழிவர்சா தநமிங் நான்
கே.

சமந்தமம் விடல்ச கித்தல் சமாதாநஞ் சி
ரத்தை யாரும், சமமகக் கரண தண்டந் தம
ம்புறக் கரண தண்டம்,அமர்தரு கருமம் பற்
று தறுத்தலே விடலென் ருகும், மமர்செ
யுங் காம மாதி வரினடக் குதல் சகித்தல். 2

சிரவணப் பொருளைத் தானே சித்தஞ்
சிந் திக்கு மாறு, சரதமா வைக்கு மித்தைச்
சமாதாந மென்பர் மேலோர், பரமசற் குரு
நூ லன்பு பற்றலே சிரத்தை யாகும், வரமி
கு சமாதி யாறு வகையின்சொற் பொருளி
தாமே. 3

சாதந மின்றி யொன்றைச் சாதிப்பா
ருலகி லில்லை, ஆதலா லிந்த நான்கு மடைந்
தவர்க் கறிவுண் டாகும், நூதந விவேகி யுள்
ள நுழையாது நுழையு மாகில், பூதசங் மங்
கள் கோடி புரிதனும் புருட னாமே. 4

இவனதி காரி யானோ னிந்திரி யங்க
ளாலும், புவநதெய் வங்க ளாலும் பூதபௌ
திகங்க ளாலும், தவநமூன் றடைந்து வெய்
யிற் சகித்திடாப் புழுப்போல் வெம்பிப்,பவ
மறு ஞாந தீர்த்தம் படிந்திடப் பதறி னா
னே. 5

ஆனபின் மனைவி மக்க ளர்த்தவே
டணைகண் மூன்றில், கானவர் வலையிற் பட்
டுக் கைதப்பி யோடு மான்போல், போன
வன் வெறுங்கை யோடே போகாத வண்
ணஞ் சென்று, ஞாநசற் குருவைக் கண்டு
நன்றாக வணங்கி னானே. 6

வணங்கினின் றழுது சொல்வான் மாய
வாழ் வெனுஞ்சோ கத்தால், உணங்கினே
னைய னேயென் னுள்ளமே குளிரும் வண்
ணம், பிணங்கிய கோச பாசப் பின்னலைச்

சிங்க மாக்கி, இணங்கிய குருவே யென்னை
யிரட்சித்தல் வேண்டு மென்றான். 7

அன்னதன் சிசுவை யைய ஞமைமீன்
பறவை போலத், தன்னகங் கருதி நோக்கி
த்தடவிச்சந் நிதியி ருத்தி, உன்னது பிறவி
மாற்று முபாயமொன் றுண்டு சொல்வேன்,
சொன்னது கேட்பா யாகிற் றொடர்பவந்
தொலையு மென்றான். 8

தொடர்பவந் தொலையு மென்று சொ
ன்னதைக் கேட்ட போதே, தடமடு மூழ்
கினோன்போற் சரீரமுங் குளிர்ந்துள் ளாறி,
அடருமன் பொழுகு மாபோ லானந்த பாஷ்
பங் காட்டி, மடன்மலர்ப் பாத மீண்டும் வ
ணங்கிநின் றீது சொல்வான். 9

சொன்னது கேட்க மாட்டாத் தொ
ண்டனே னுலுஞ் சுவாமி, நின்னது கருணை
யாலே நீரெனை யாள லாமே, உன்னது
பிறவி மாற்று முபாயமொன் றுண்டென்
றீரே, இன்னதென் றதைநீர் காட்டி யீடே
ற்றல் வேண்டு மென்றான். 10

அடங்கிய விருத்தி யானென் றறிந்த பின் செறிந்த மண்ணின், குடம்பையுட் புழு முன் னூதுங் குளவியின் கொள்கைபோலத், தொடங்கிய குருவு மாம்ம சொரூபமே மருவ வேண்டி, உடம்பினுட் சீவ னைப்பார்த் துபதேச மோது வாரே. 11

வாராயென் மகனே தன்னை மறந்தவன் பிறந்தி றந்து, தீராத சுழற்காற் றுற்ற செத்தைபோற் சுற்றிச் சுற்றிப், போராத கால நேமிப் பிரமையிற் றிரிவன் போதம், ஆராயுந் தன்னைத் தானென் றறியுமவ் வளவுந் தானே. 12

தன்னையுந் தனக்கா தாரத் தலைவனையுங்கண் டானேல், பின்னையத் தலைவன் றானாய்ப் பிரமமாய்ப் பிறப்புத் தீர்வன், உன்னைநீ யறிந்தா யாகி லுனக்கொரு கேடு மில்லை, என்னைநீ கேட்கை யாலே யீதுப தேசித்தேனே. 13

என்னைத்தான் சடமு வுள்ளத் தெண்ணியோ சொன்னீ ரையா, தன்னைத் தானறி

யா மார்த்தர் தரணியி லொருவ ருண்டோ, பின்னைத்தா னவர்க ளெல்லாம் பிறந்திறந் துழலு வானேன், ரின்னைத்தா னம்பி னேற்கு நிண்ணய மருளு வீரே. 14

இன்னது தேகந் தேகி யிவனென வுணர்வான் யாவன், அன்னவன் றன்னைத் தானென் றறிந்தவ னருகு மென்றார், சொன்னபின் றேகி யாரித் தூலமல் லாம லென்றான், பின்னது கேட்ட வையர் பீழையு நகையுங் கொண்டார். 15

தேகமல் லாமல் வேறே தேகியார் காணே னென்றாய், மோசமாங் கநவில் வந்து முளைத்தவ னெவனீ சொல்வாய், சோகமாங் கநவு தோன்றாச் சுழுத்திகண் டவனார் சொல்வாய், ஆகநீ நனவி லெண்ணு மறிவுதா னேது சொல்வாய். 16

நனவுகண் டதுநான் கண்ட நனவுள நினைவு நீங்கிக், கநவுகண் டதுஞ்சு ழுத்தி கண்டதும் வேறொன் றேபோல், திநமநு பவிப்ப தொக்குந் தெரியவு மில்லை சற்றே,

மாநதினி லுதிக்கும் பின்னே மறைக்கும
தருளு வீரே. 17

நூலத்தின் மரங்கள் காட்டித் தனிப்பி
றைகாட்டு வார்போல், ஆலத்தி னுடுக்கள்
காட்டி யருந்ததி காட்டுவார் போல், தூலத்
தை முன்பு காட்டிச் சூக்கும சொரூப மான
மூலத்தைப் பின்பு காட்ட முனிவரர் தொட
ங்கி னாரே. 18

அத்தியா ரோப மென்று மபவாத மெ
ன்றுஞ் சொல்லும், உத்தியாற் பந்தம் வீடெ
ன் றுரைக்கும்வே தாந்தமெல்லாம், மித்தை
யா மாரோபத் தாற் பந்தமா மபவா தத்தான்
முத்தியா மிவ்வி ரண்டின் முந்தியா ரோபங்
கேளாய். 19

ஆரோப மத்தி யாசங் கற்பனை யாவ
வெல்லாம், ஒரோரர்வத் துவினில் வேறே
யோரோர்வத் துவினை யோர்தல், நாரூடு பணி
யாய்த் தோன்ற னரனுகி தறியிற் றேன்
றல், நீரூடு கானற் றேன்ற னிறந்தலம் வெ
ளியிற் றேன்றல். 20

இப்படிப் போல நாம ரூபங்க ளிரண்டு மின்றி, ஒப்பமா யிரண்டற் றொன்று யுணர் வொளி நிறைவாய் நிற்கும், அப்பிர மத்திற் றோன்று மைம்பூத விகார மெல்லாம், செப் புகற் பனையி னாலே செனித்தவென் றறிந்து கொள்ளே. 21

அதுதானெனப் படியென் றக்கா லநாதி யாஞ் சீவ ரெல்லாம், பொதுவான சுழுத்தி போலப் பொருந்துமவ் வியத்தந் தன்னில், இதுகால தத்து வப்பே ரீசனுட் பார்வை யாலே, முதுமூல சுபாவம் விட்டு முக்குணம் வியத்த மாமே. 22

உத்தம வெளுப்புச் செம்மை யுரைத்திடு கறுப்பு மாகும், சத்துவ குணத்தி னோடு ரசோ குணந் தமோகு ணந்தான், சுத்தமோ டழுக்கி ருட்டாச் சொல்லுமுக் குணமு மூன்று ய், ஒத்துள வேனுந் தம்மு ளொருகுண மதிக மாமே. 23

ஒருவழி யிதுவா மித்தை யொருவழி வேறுச் சொல்வர், மருவுமவ் வியத்தந் தானே

மகதத்வ மாகு மந்த, அருண்மக தத்துவந்
தா னகங்கார மாகு மென்றும், கருவகங்கார
மூன்ருக் காட்டிய குணமா மென்றும். 24

இக்குணங் களிலே விண்போன் றிருக்
குஞ்சிற் சாயை தோன் றும், முக்குணங் களி
னுந் தூய்தா முதற்குண மாயை யாகும், அக்
குணப் பிரமச் சாயை யந்தரி யாமி மாயை,
எக்குணங் களும்பற் முதோ னிமித்தகா ரண
ஞ் மீசன். 25

ஈசனுக் கிதுசு ழுத்தி யிதுவேகா ரணச
ரீரம், கோசமா நந்த மாகுங் குணமிரா சதம
வித்தை, தேசறு மவித்தை தோறுஞ் சிற்சா
யை சீவ கோடி, நாசமா முயிர்க்கப் போது
நாமமும் பிராஞ்ஞ னுமே. 26

அழுக்கொடு பற்றுஞ் சீவர்க் கதுவேயா
நந்த கோசம், சுழுத்திகா ரணசரீ ரஞ்சொன்
னதிம் மட்டு மோக, முழுக்குணத் திரண்
டால் வந்த மூலவா ரோபஞ் சொன்னேம்,
வழுத்துசூக் குமவா ரோப வழியுநீ மொழி
யக்கேளாய். 27

ஏமமா யாவி கோத வீசஞ ரருளி ஞ
லே, பூமலி யுயிர்கட் கெல்லாம் போகசா தந
டுண் டாகத், தாமத குணமி ரண்டு சத்தியா
யப் பிரிந்து தோன்றும், வீமமா மூட லென்
றும் விவிதமாந் தோற்ற மென்றும். 28

தோற்றமாஞ் சத்தி தன்னிற் சொல்
லிய விண்ணும் விண்ணிற், காற்றதாங் காற்
றிற் றீயாங் கனலினீர் நீரின் மண்ணும்,
போற்றுமிவ் வைந்து நொய்ய பூதங்க ளெ
ன்று பேராம், சாற்றுமற் றிவற்றிற் போக
சாதந தநுவுண் டாகும். 29

ஆதிமுக் குணமிப்பூத மடங்கலுந்தொ
டர்ந்து நிற்கும், கோதில்வெண் குணத்தி
லைந்து கூறுணர் கருவி யாகும், ஓதிய பின்
னை யைந்து முளம்புத்தி யிரண்டா ஞாந,
சாதந மாமிவ் வேழுஞ் சற்குணப் பிரிவி
ஞலே. 30

இராசத குணத்தில் வேறிட் டெடுத்த
கூ றைந்து மைந்தும், பிராணவா யுக்க ளெ

ன்றும் பெருந்தொழிற் கருவி யென்றாம் பராவிய பெயரா மிந்தப் பதினேழு மிலிங் க தேகம், சுராசுரர் நரர்வி லங்காய்த் தோ ன்றிய வுயிர்கட் கெல்லாம். 31

இவ்வுடன் மருவுஞ் சீவ னிலங்குதை சதனென் றுவன், இவ்வுடன் மருவு மீச னிரணிய கருப்ப னுவன், இவ்வுட லிரண்டு பேர்க்கு மிலிங்கசூக் குமச ரீரம், இவ்வுடற் கோசமூன்று மிதுகநா வவத்தை யாமே.

சூக்கும சடமிம் மட்டுஞ் சொல்லினே மிப்பாற் றூலம், ஆக்குமா றோபந் தானு மடைவினின் மொழியக் கேளாய், தாக்கு மிவ் வுயிர்க்குத் தூல தநுவும்போ கமுமு ண் டாகக், காக்குமவ் வீசன் பஞ்சீ கரணங் கள் செய்தான் றுனே. 33

ஐந்துபூ தமும்பத் தாக்கி யவைபாதி ந ன்னுன் காக்கி, நந்துதம் பாதி விட்டு நான் கொடு நான்குங் கூட்ட, வந்தன தூல பூத மகா பூத மவற்றி னின்றுந், தந்தன நான் காந் தூல தநுவண்ட புவந போகம். 34

தூலமே மருவுஞ் சீவன் சொல்லிய விசுவனாகும், தூலமே மருவு மீசன் சொலும்விராட் புருடனாகும், தூலமே யந்நகோசந் தன்னுஞ்சாக் கிரவவத்தை, தூல கற் பனையீ தென்று தொகுத்தது மநத் திற் கொள்வாய். 35

சீரிய வீச னார்க்குஞ் சீவர்க்கு முபாதி யொன்றேல், ஆரிய குருவே பேத மறிவ தெப்படியென் றக்கால், காரிய வுபாதி சீவன் காரண வுபாதி யீசன், வீரிய மிகுசமட்டி வியட்டியாற் பேத மாமே. 36

மரங்கள்போல் வியட்டி பேதம் வந மெனல் சமட்டி பேதம், சரங்கடா வரங்கள் பேதந் தனியுடல் வியட்டி யென்பார், பரம் பிய வெல்லாங் கூட்டிப் பார்ப்பதே சமட்டி யென்பார், இரங்கிய பலசீ வர்க்கு மீசர்க்கும் பேத மீதே. 37

கற்பனை வந்த வாறு காட்டினேங் கா ண்ப வெல்லாஞ், சொற்பனம் போலு மென் றே துணிந்தவன் ஞானி யாவான், செற்

புதை மழைக்கா லம்போய்த் தெளிந்தவா
காசம் போல, அற்புத முத்தி சேருமபவாத
வழியுங் கேளாய். 38

அரவன்று கயிறென் றார்போ லாள
ன்று தறியென் றற்போல், குரவன்சொல்
லுபதே சத்தாற் கூறுநூ லொளியைக் கொ
ண்டு, புரமன்று புவந மன்று பூதங்க ளன்
று ஞாநத், திரமென்னும் பிரம மென்று
தெளிவதே யபவா தங்காண். 39

படமுநூ லும்போற் செய்த பணியும்
பொன் னும்போற் பார்க்கில், கடமுமண்
ணும்போ லொன்றாம் காரிய கார ணங்கள்,
உடன்முதற் சுபாவ மீறு வொன்றிலொன்
று தித்த வாறே,அடைவினி லொடுக்கிக் கா
ண்ப தபவாத வுபாய மாமே. 40

தூடண தமத்தில் வந்த தோற்றமாஞ்
சக்தி செய்யும், ஏடணை விகாரஞ் சொன்னீ
ரிரண்டுசத் திகளென் றீரே,மூடலாஞ் சத்தி
செய்யு மோகமுஞ் சொல்லு மையா, கேட

றக் குருவே யென்னக் கிருபையோ டருள் செய் வாரே. 41

நானிகர் தனக்கா மீசன் றனையுந்தங் களைத்தாங் கண்ட, ஞாநிக டமையு மன்றி நாஸ்திக பாதியென்னும், ஊனிடை யுயிர்க ளுள்ளத் துணர்விழி குருடாம் வண்ணம்,வா னிலந் திசைகண் மூடு மழைநிசி யிருள்போ ன் மூடும். 42

மூன்றமாம் பிரமத் துக்கும் புறத்துள விகாரங் கட்கும்,ஆன்றகூ டஸ்த னுக்கு மக த்துள விகாரங் கட்கும், தோன்றிய பேதஞ் சற்றுந் தோன்றாமன் மறைத்து மூடும், ஊன்றிய பவவி யாதி யுண்டாக்கு முபாதி யீதே. 43

ஆதார மறைந்து போனு லாரோப மெ ங்கே தோன்றும், ஆதார மறையா தாகி லா ரோப மிலேயே யென்றால், ஆதாரஞ் சமம்வி சேட மாமென விரண்டு கூறும், ஆதாரஞ் சமமா, மெங்கு மாரோபம் விசேட மாமே.

சகமதி லிதுவென் சுட்டாஞ் சமாநந் தான் மறைந்திடாது,மிகவிது கயிறு மென்

னும் விசேடந்தான் மறைந்து போகும், அக மெனுஞ் சமாநத் தன்னை யஞ்ஞாந மறைத் திடாது, பகர்விசே டமதாஞ் சீவன் பரமெ னு மதனை மூடும். 45

கேவல நிலைதோன் றுமற் கெடுத்தது பஞ்ச கோசஞ், சீவனும் சகத்து மாகிச் செனி த்தவிட் சேப மன்றோ, ஆவர ணந்தா னேபா ழனர்த்தமென் றுரைத்த தேதோ, மேவ ருங்குருவே யென்று வினவிடின் மகனே கேளாய். 46

தோற்றமாஞ் சக்தி தானுந் துன்பமாம் பவமா னாலும், ஆற்றலான் முத்தி சேர்வார்க் கநுகூல மாகுங் காணீ, ஊற்றமாம் பகற்கா லம்போ லுபகார நிசியா லுண்டோ, மாற்ற மென்னுறைப்பேன் மைந்தா மறைப்பதுமி கப்பொல் லாதே. 47

சுழுத்தியிற் பிரள யத்திற் றோற்றமாஞ் சகங்கண் மாண்டும், அழுத்திய பவம்போய் முத்தி யடைந்தவ ரொருவருண்டோ, முழு த்தவிட் சேப மெல்லா முத்தியிற் கூட்டு கிற்

கும், கொழுத்தவா வரண முத்தி கூடாமற் கெடுத்த கேடே. 48

சுத்தியில் வெள்ளி போலத் தோன்றிய தோற்ற மான,சத்தியும் பொய்யே யென்றுற் சத்திசா தநமா வந்த,முத்தியும் பொய்யா மென்னின் மோகநித் திரைவி லங்கால்,நித் திரை தெளியு மாபோ னிருவாண நிலைமெய் யாமே. 49

இம்பரி னஞ்சை நஞ்சா விரும்பினை யிரும்பா லெய்யும், அம்பினை யம்பாற் பற்று மழுக்கினை யழுக்கான் மாய்ப்பார், வம்பியன் மாயை தன்னை மாயையான் மாய்ப்பர் பின்னைத்,தம்பமா மதுவுங் கூடச் சவஞ்சுடு தடி போற் பொமே. 50

இந்தமா யையினாற் சீவர்க் கேழவத் தைகளுண் டாகும், அந்தவே ழவத்தை தம்மை யடைவினின் மொழியக் கேளாய், முந்தவஞ் ஞாந மூடன் மூளைத்தல்கா ஞாத ஞாநம், சந்ததங் கண்ட ஞாநந் தழற்கெடல் குளிர்மை யாதல். 51

பிரமமாந் தனைம றந்த பேதைமை யேயஞ் ஞானம், பரனிலை காணே மென்று பகர்தலா வரண மூடல், நரனொரு கருத்தாற் சீவ னானென முளைத்த தேற்றம், குரவன் வாக் கியத்தாற் றன்னைக் குறிக்கொளல் பரோட்ச ஞானம். 52

தத்துவ விசாரஞ் செய்து சகலசந் தேக மும்போய், அத்துவி தந்தா னாத லபரோட் ச ஞான மாகும், கர்த்தனாஞ் சீவ பேதங் கழி வதே துக்கம் போகல், முத்தனா யெல்லாஞ் செய்து முடிந்ததா னந்த மாமே. 53

இதுநினைக் கறியும் வண்ண மிப்படி யொருதிட் டாந்தம், புதுமையாங் கதைகேள் பத்துப் புருடரோ ராற்றை நீந்தி, உதகதீ ரத்தி லேறி யொருவனொன் பதுபே ரெண்ணி, அதனொடு தசமன் றானென் றறியா மன் மயங்கி நின்றான். 54

அறியாத மயலஞ் ஞான மவனிலை கா ணே மென்றல், பிறியாவா வரண மாகும் பீழைகொண் டழல்விட் சேபம், நெறியா

ளன் றசம னுண்டு நிற்கின்ற னென்ற
சொல்லைக், குறியாக வெண்ணி நெஞ்சிற்
கொள்வது பரோட்ச ஞானம். 55

புண்ணிய பதிகன் பின்னும் புருட
ரோன் பதின்மர் தம்மை, எண்ணுநீ தசம
னவை யென்னவே தன்னைக் காணல், கண்
ணினிற் கண்ட ஞானங் கரைதல்போ வது
நோய் போதல், திண்ணிய மநதி லையந்
தெளிதலா நந்த மாமே. 56

தசபுமான் றனைக்கண் டாற்போற் சற்
குரு மூர்த்தி யேயென், நிசவடி வினையான்
காண நீர்காட்டல் வேண்டு மென்றான், சுசி
பெறுமிலட்சி யார்த்தந் துவம்பதந் தற்பதங்
கட், கசிபத வைக்கியஞ் செய்யு மதுசெயு
முண்மை கேளாய். 57

விண்ணென்றை மகாவிண் ணென்று
மேகவிண் ணென்றும் பாரின், மண்ணெ
ன்று கடவிண் ணென்று மருவிய சலவிண்
ணென்றும், எண்ணுங்கற் பனைபோ லொன்

றே யெங்குமாம் பிரம மீசன், நண்ணுங்கூ டஸ்தன் சீவ ஞன்ருசை தங்யமாமே. 58

பூச்சிய வீசன் சீவன் புகல்பத மிரண்டி னுக்கும், வாச்சியம் லட்சி யந்தான் மலமிலாப் பிரம மாந்மா, காச்சிய பாலி னெய்போற் கலந்தொன்ருங் கடைந்தெடுக்கும், ஆச்சிய மென்ன வுன்னை யறிந்துநீ பிறிந்து கொள்ளே. 59

பிறிவதெப் படியென் றக்காற் பிணமாகு முடனு னென்னும், அறிவினைக் கொல்லல் வேண்டு மைம்பூத விகார மன்ருே,வெறியதோற் றுருத்தி மூக்கின் விடுவது போலுன் மூக்கால்,எறிபிராணனுநீ யல்லை யிராசத குணவி காரம். 60

கரணமா மந்த புத்தி கருத்தாவா மவையாம் மாவோ, தரமுள விரண்டு கோசஞ் சத்துவ குணவி காரம், வரமறு துயிலா நந்த மயனையு நானென் ருதே, விரவிய தமவஞ் ஞாந விருத்தியின் விகார மாமே. 61

சத்தொடு சித்தா நந்தஞ் சமந்திரஞ் சாட்சி யேகம், நித்தியம் வியாபி யாம்மா நீயது வாவ றிந்து, பொத்தொடு சடந்துக் காதி பொருந்துபே தங்க ளான, குத்திர பஞ்ச கோசக் குகைவிட்டு வெளியி லாவாய். 62

பஞ்சகோ சமும்விட் டப்பாற் பார்க்கின்ற பொழுது பாழே, விஞ்சிய ததுவல் லாமல் வேறொன் றுந் தெரியக் காணேன், அஞ்சன விருளே யோநா னகமென வநுப விப்பேன், வஞ்சமில் குருவே யென்ற மகன் மதி தெளியச் சொல்வார். 63

முன்புக றசமன் புத்தி மோகத்தா லெண்ணி யெண்ணி, ஒன்பது பேரைக் கண்ட வொருவனுந் தனைக்கா ணாத, பின்பவ னிடையிற் கண்ட பெரியபா ழவனே பாராய், அன்புள மகனே காண்ப தடங்கலுங் காண்பா னீயே. 64

தூலசூட் சுமவஞ் ஞாநத் தோன்றுமூன் றவத்தை தாமும், காலமோர் மூன்றுஞ் சர்மக் கடலெழுங் கல்லோ லங்கள், போல

வே வந்து வந்து போனவெத் தனையென்
பேனுன், ஆலமர் கடவு ளாணை யவைக்கெ
லாஞ் சாட்சி நீயே. 65

எல்லாங்கண் டறியு மென்னை யேது
கொண்டறிவே னென்று, சொல்லாதே சுய
மாஞ் சோதிச் சுடருக்குச் சுடர்வே றுண்
டோ,பல்லார்முன் றசமன் றன்னைப் பார்ப்
பதுந் தனைக்கொண் டேதான், அல்லாமற்
பதி னொன் ருனு மவனிடத் துண்டோ
பாராய். 66

அறிவுக்கு மறிவு செய்யு மறிவுவே று
ண்டென் றெண்ணும், அறிவற்ற குதர்க்க
மூடர்க்கநவஸ்தை பலமாய்த் தீரும், அறிய
டும் பொருணீ யல்லை யறிபடாப் பொருணீ
யல்லை,அறிபொரு ளாகு முன்னை யநுபவித்
தறிவாய் நீயே. 67

மதுரமாங் கட்டி சுட்ட மாப்பணி யார
மெல்லாம், மதுரமாக் கியவ தற்கு மதுரந்
தான் சுபாவ மன்றோ, அதுவிது வெனுஞ்ச
டங்க ளறிவாக வறிவைத் தந்தே, அதுவிது
விரண்டு மாகா வகம்பொரு ளறிவாய் நீயே.

இந்தநீ துவம்ப தத்தி னிலட்சியப் பொ
ருளா மென்றும், பந்தமில் பிரம மேதற் பத
ந்தனிலி லட்சியார்த்தம்,அந்தமாஞ் சீவனீச
னவர்களே வாச்சியார்த்தம், சந்தநம் பேத
மாளார் தமக்கயிக் கிடங்கூ டாதே. 69

பேதமா னதுவுங் கேளாய் பெயரால
மிடங்க ளாலும், ஒசரு ரூபாதி யாலு மூட
லாலு மூணர்வி னலும், பாதலம் விசும்பு
போலப் பலதூர மகன்று நிற்பர்,ஆதலா லிவ
ர்க்கெங் நாளு மைக்கியமென் பது கூடாதே.

வடநூல்வல் லவர்கள் சொல்லும் வாச
கப் பொருள் சேராமல், இடராகிற் பொரு
ளாம் வண்ண மிலக்கணை யுரையாற் கொள்
வார், திடமான வதுவு மூன்ருச் செப்புவார்
விட்ட தென்றும்,விடலிலா தென்றும் விட்
டு விடாததென் றும்பே ராமே. 71

கங்கையிற் கோஷ மென்றுங் கறுப்புச்
சேப் போடு தென்றும், தங்கிய ஸோயந் தே
வ தத்தனென் றுஞ்சொல் வார்கள், இங்கு
தாரணங்களாக்கி யிந்தமூன் றுரைக ளாலே

துங்சநூல் விரோத மான சொல்லெலாம் பொருளாந் தானே. 72

பன்னிய ஸோய மென்னும் பதங்களின் வாச்சி யார்த்தம், அந்நிய தேசங் கால மவனிவ னென்ப வெல்லாம், சொன்னவிவ் விரோதம் விட்டுத் தொடரிலக் கியம்விடாமல், உன்னிடிற் றேவ தத்த னொருவனை வெளியாக் காட்டும். 73

தத்துவ மெனும்ப தங்கள் பிரமமாய்ச் சாட்சி யான,வத் துவை விடாமற் பேத வாச்சியார்த் தத்தை விட்டு,நித்தமு மதுநீ யாகு நீயது வாகு மென்னும், அர்த்தமு மகண்டமென்றே யசிபத வைக்கியங் காட்டும். 74

கடநீரின் மேக நீரிற் கண்டவானிரண்டும் பொய்யே, குடவானும் பெரிய வானுங் கூடியொன் றுமெப் போதும்,இடமான பிரமஞ் சாட்சி யிரண்டுமெப் போது மேகம்,திடமாகச் சுவாநு பூதி சிவோகமென் றிருந் திடாயே, 75

தஞ்சமாங் குருவுஞ் சொன்ன தத்துவ வழி தப் பாமல், பஞ்சகோ சமுங்க டந்து பா ழையுந் தள்ளி யுள்ளில், கொஞ்சமா மிருப்பும் விட்டுக் கூடஸ் தன் பிரம மென்னும், நெஞ்சமு நழுவி யொன்றாய் நின்றபூ ரணத்தைக் கண்டான். 76

அநுபவா நந்த வெள்ளத் தழுந்தியே யகண்ட மாகித், தநுகர ணங்க ளாதி சகல மு மிறந்து சித்தாய், மநதுபூ ரணமாய்த் தேக மானசற் குருவுங் காண, நனவினிற் சுழுத்தி யாகி நன்மகன் சுபாவ மானான். 77

அளிமக னெடும்போ திவ்வா றானபின் மநது மெள்ள, வெளியில்வந் திடவு ணர்ந்தான் விமலதே சிகனைக் கண்டான், துளி விழி சொரியப் பாதந் தொழுதுவீழ்ந் தெழுந்து சூழ்ந்தான், குளிர்முகச் சுவாமி கேட்கக் கும்பிட்டு நின்று சொல்வான். 78

ஐயனே யெனதுள் ளேநின் றநந்தசங் மங்க ளாண்ட, மெய்யனே யுபதே சிக்க வெளிவந்த குருவே போற்றி, உய்யவே முத்தி

நல்கு முதவிக்கோ ருதவி நாயேன், செய்யு
மா றொன் றுங் காணேன் றிருவடி போற்றி
போற்றி. 79

சிட்டனிவ் வாறு கூறத் தேசிகர் மகிழ்
ந்து நோக்கிக், கிட்டவா வெனவி ருத்திக்
கிருபையோ டருளிச் செய்வார், துட்டமாந்
தடைகண் மூன் றுந் தொடராமற் சொரூப
ஞாந, நிட்ட னு யிருக்கி லீதே நீசெயு முத
வி யாமே. 80

நீநானென் றிரண்டிலாம னிறைந்தபூ
ரணமா யெங்கும், நானுகத் தெளிந்த ஞாந
நழுவுமோ குருவே யென்றான், தாநாகும்
பிரம ரூபஞ் சற்குரு நூலாற் றோன் றும்,
ஆனாலுந் தடைக ளுண்டே லநுபவ முறை
த்தி டாதே. 81

தடையெவை யெனிலஞ் ஞாந சந்தே
க விபரீ தங்கள், படர்செயு மிந்த மூன் றும்
பலசம்பப் பழக்கத் தாலே, உடனுடன் வரு
ம்வந் தக்கா லுயர்ஞாநங் கெடுமி வற்றைத்,
திடமுடன் கெடுப்பாய் கேட்டல் சிந்தித்த
தெளித லாலே. 82

அக்கினி கட்டுப் பட்டா லற்பமுஞ் சுட மாட் டாது, மக்கிந ஞானத் தாலே வந்தபந் தமும்வே வாது, சிக்கெனப் பழகிக் கேட் டல் சிந்தித்த றெளித லாலே, விக்கிந மட ஞ்சந் தேகம் விபரீதம் போக்கு வாயே. 83

பிரமபா வனையை மூடிப் பேதங்காட் டுவதஞ் ஞானம், குரவன்வாக் கியநம் பாமற் குழம்புவ தாஞ்சந் தேகம், திரமறு சகமெய் யென்றுந் தேகநா னென்று முள்ளே, விர விய மோகந் தானே விபரீத மென்பர் மே லோர். 84

தத்துவ வநுபோ கந்தான் சாதித்தல் கேட்ட லென்பார், ஒத்துள பொருளே கத் தாலுசாவல்சிந் தித்த லென்பார், சித்தமே காந்தமான தெரிசநந் தெளித லென்பார், நித்தமிப் படிசெய் தக்கா னிர்வாணம் பெ றுவாய் நீயே. 85

எத்தனை நாண்ஞா தாவு ஞாநமு மிரு க்கு முன்பால், அத்தனை நாளும் வேண்டு மப்பாலோர் செயலும் வேண்டா, நித்தமும்

வெளிபோற் பற்று ஞேயமாத் திரமாய்ச்
சீவந், முத்தரா னவர்வி தேக முத்திபெற்
றிருப்பா ரென்றும். 86

ஞாநமார் சீவந் முத்தர் நால்வகை
யாவர் கேளாய், வானிகர் பிரம வித்து வர
ன்வரி யான்வ ரிட்டன், ஆனவர் நாம மாகு
மவர்களிற் பிரம வித்தின், தாநமு மற்
றை மூவர் தாரதம் மியமுஞ் சொல்வேன்.

தீரராய்ப் பிரம வித்தாய்த் தெளிந்தவர்
தெளியு முன்னம், வாரமா யிருந்த தங்கள்
வருணமாச் சிரமஞ் சொன்ன, பாரகா ரிய
மா னுலும் பலர்க்குப கார மாக, நேர தாச்
செய்வர் தீர்ந்த நிலைவிடார் சீவந் முத்தர்

காமமா திகள்வந் தாலுங் கணத்திற்
போ மநத்திற் பற்றார், தாமரை யிலைத்தண்
ணீர்போற் சகத்தொடுங் கூடி வாழ்வார்,
பாமர ரெனக்காண் பிப்பார் பண்டிதத் திற
மை காட்டார், ஊமரு மாவா ருள்ளத் துவ
கையாஞ் சீவந் முத்தர். 89

பேதகர் மத்தால் வந்த பிராரத்த நா
நா வாகும், ஆதலால் விவகா ரங்க ளவரவர்க்
காவ வாகும், மாதவஞ் செயினுஞ் செய்வார்
வாணிபஞ் செயினுஞ் செய்வார், பூதலம் பு
ரப்பா ரையம் புகுந்துண்பார் சீவந் முத்தர்.

சென்றது கருதார் நாளைச் சேர்வது நி
னையார் கண்முன், நின்றது புசிப்பார் வெ
ய்யி னிலவாய்விண் விழுது வீழ்ந்து, பொ
ன்றின சவம்வாழ்ந் தாலும் புதுமையா
வொன்றும் பாரார், நன்றுதீ தென்னுர்
சாட்சி நடுவான சீவந் முத்தர். 91

பின்னைமூ வரிலி ரண்டு பேர்களுஞ் ச
மாதி யோகம், தன்னையுற் றிருப்பார் தேக
சஞ்சார நிமித்தந் தானும், உன்னுவோன்
வரன்வேற் றோரா லுணர்பவன் வரியா னு
கும், அந்நியர் தம்மாற் றன்னு லறியாதோ
ன் வரிட்ட னுமே. 92

அரிதாகு மிவர்க ளிவ்வா றநேகரா னுலு
முத்தி, சரியாகும் பாடு பட்ட சமாதிக்குப்

பலனே தென்றால், பெரிதான திருஷ்ட துக்
கம்பிரமவித் தநுபவிப்பன், வரியானும் வர
னு மற்றை வரிட்டனுஞ் சுகமாய் வாழ்வார்

பிரமஞா நிகளுங் கர்மப் பேதையர்
போலே வாழ்ந்தால், திரமுறு மஞ்ஞா நம்
போய்ச் செநியாத வழியே தென்றால், பர
வுமா காச மொன்றிற் பற்றாது மற்றை நா
லும், விரவின தோடுங் கூடும் விதமிரு வோ
ரு மாவார். 94

சீவன்முத் தரைச்சே வித்தோர் சிவ
னய னெடுமா லான, மூவரு மகிழ நோன்பு
முழுவதுஞ் செய்து சம்ம, பாவந மாணு
ரென்று பழமறை முழங்கு மிப்பால், மேவ
ருஞ் சீவன் முத்தர் விதேகமுத் தியுநீ கே
ளாய். 95

பஞ்சினை யூழித் தீப்போற் பலசம்ம
விவித வித்தாம், சஞ்சித மெல்லா ஞானத்
தழல்சுட்டு வெண்ணீ றாக்கும், கிஞ்சிதா
காமி யந்தான் கிட்டாமல் விட்டுப் போகும்,

விஞ்சின பிராரத் தத்தின் விளையநு பவித்
துத் தீரும். 96

போறுமையாற் பிராரத் தத்தைப் புசிக்கு
நாட் செய்யுங் கர்மம், மறுமையிற் றொடர்ந்
திடாமல் மாண்டுபோம் வழியே தென்றால்,
சிறியவ ரிகழ்ந்து ஞானி செய்தபா வத்தைக்
கொள்வார், அறிவுளோ ரறிந்து பூசித் தற
மெலாங் கைக்கொள் வாரே. 97

அரியமெய்ஞ் ஞானத் தீயா லவித்தை
யா முடனீ றாகும், பெரியதூ லமுங்கா லத்
தாற் பிணமாகி விழுமந் நேரம், உரியசூக்
குமச ரீர முலையிரும் புண்ட நீர்போல், துரி
யமாய் விபுவாய் நின்ற சொரூபத் திலிறந்து
போமே. 98

கடமெனு முபாதி போனாற் ககநமொ
ன் றானாற்போல, வுடலெனு முபாதிபோன
வுத்தரஞ் சீவன் முத்தர், அடிமுடி நடுவுமின்
றியகம்புற மின்றி நின்ற, படிதிகழ் விதேக
முத்திப் பதமடைந் திருப்ப ரென்றும். 99

சொல்லிய மகனே யெங்குஞ் சூழ்வெ
ளியிருக்க மண்ணைக், கெல்லிய பின்பு தோ
ன்றுங் கிணற்றினு காசம் போலே, ஒல்லை
யாம் பிரம நூலா லுற்றது போலே தோன்
றும், எல்லையி னுமெய்ப் போது மேகமென்
றிருந்து வாழ்வாய். 100

கானனீர் கிளிஞ்சில் வெள்ளி கந்தர்ப்ப
நகர்க நாலூர், வாநமை கயிற்றிற் பாம்பு மல
டிசேய் முயலின் கோடு, பீநமாந் தறிபு
மானிற் பிரபஞ்ச மெல்லாம் பொய்யே,
ஞாநமெய் மகனே யுன்னை நம்மானை மறந்
திடாதே. 101

தத்துவ விளக்கப் படலம்
முற்றுப் பெற்றது.

சந்தேகந் தெளிதற் படலம்.

நிரர்குழி பறித்து மெள்ள நாட்டிய நெடிய கம்பம், உரமுறக் குத்திக் குத்தி யுறைப்பிக்கு முபாயம் போலே, பரமசிற் சொரூபந் தன்னிற் பற்றிய மனோவி ருத்தி, திரநிலை பெறச்சந் தேகந் தெளிதலை மொழிகின்றேனே. 1

நற்கருத் துடையோ னாகி ஞானவானாகி நின்றோன், மர்க்கட நியாயம் போலே மகாபூத விகாரந் தொட்டு, நிர்க்குண விதேக முத்தி நிலைபரி யந்தஞ் சொன்ன, சற்குரு வினைவி டாமற் சந்தத மநுச ரித்தான். 2

சந்ததம் புருடன் றன்னைச் சாயைபோல் விடாம லன்பாம், மைந்தனை நோக்கிச் சாட்சி மாத்திர மாயின் ரூயோ, சிந்தையி லைய மெல்லாந் தீர்ந்தவோ தெளிவி னுள்ளே, அந்தரங் கலந்த துண்டோ வநுபவ முரைசெய் வாயே. 3

எனவுரைத் தருளு மாசா னிருபதம் வணங்கி யெந்தாய், சநநவன் காட்டின் மோகத் தமத்தெழு பேதப் பேய்கள், உன தருளுதய வெற்பி லுபதேச வருக்கன் றோன்றி, மநவிழி தெரிய ஞாந வான்கதிர் பரந்தா லுண்டோ. 4

மந்திர மூர்த்தி தன்னை மாற்றிய பேய் போனாலும், எந்திர மெழுதிக் கட்டி யினிவரா வகைசெய் வார்போல், முந்தியுன் னுபதேசத்தான் மோகம்போனாலு மையா, புந்தியின் றுறைக்க வின்னம் புகலும்விண் ணப்ப முண்டே. 5

ஆகமப் பிரமாணத்தா லறியென்றும் வாக்குக் கெட்டா, தேகமாம் பிரம மென்று மிதயத்தா லுணர்வா யென்றும், சோகமா மநத்திற் கெட்டாச் சுயஞ்சோதி யென்றுஞ் சொன்னீர், மோகமா மிரண்டு சங்கை முளைத்தன பறித்தி டீரே. 6

மற்றைமுப் பிரமாணத்தால் வத்து நிண்ணயங்கூடாதே, உற்றதோர் விடயம்

பூத முபயமன் ஞூத லாலே, குற்றமாங் குண வி சேடங் கூடாம லிருக்கை யாலே, இற் றது வாக்குக் கெட்டா தென்பது மறிவாய் நீயே. 7

வாக்கியந் தனக்கெட் டாத வத்துவெ ன் றுரைத்த வேதம், வாக்கிய விருத்தி யா லவ் வத்துவைக் காட்டிற் றன்றே, வாக்கி யங் களிலே மாந மாவதே தென்று யாகில், வாக்கிய மிரண்டு மெய்யே மறைகள்பொய் யாது கேளாய். 8

தன்பதி யல்லாப் பேர்க டமையல்ல னல்ல னென்றாள், அன்பனைக் கேட்ட நேர மவள்வெட்கி மௌந மானாள், என்பது போல நீக்கி யிதன்றி தன் றெனச்சே டித்த,பின் பரப் பிரமந் தன்னைப் பேசாமற் காட்டும் வேதம். 9

முந்திய சங்கை தீர மொழிந்ததை யறி ந்து கொள்வாய், பிந்திய சங்கை தீரப் பேசு முத் தரநீ கேளாய், இந்தியங் களுக்கி ராச

னிதயமா மதினெண் ணங்கள், புந்தியு மக முமென்றே புறத்தகத் துலாவி யாடும். 10

உன்முகம் போற்கண் ணாடிக் குள்ளொரு முகங்கண் டாற்போல், சிந்மய வடிவின் சாயை சித்துப்போற் புத்தி தோன்றும்,நின் மனோ விருத்தி யந்த நிழல்வழி யாயு லாவும், தன்மநன் மகனே யித்தைத் தானன்றோ ஞாந மென்பார். 11

உருக்கிய தராநீர் நாநா வுருவங்க ளானாற் போல, விருத்திகள் கடப டாதி விடய மாய்ப் பரிண மிக்கும்,அருப்பல விடய மெல் லா மாபாசன் றேற்று விக்கும், இருட்டி னில் விளக்குங் கண்ணு மில்லாமற் பொருள் கா ணாதே. 12

எரிகின்ற விளக்காற் கண்ணா லிருட் பொருள் காணல் வேண்டும், தெரிகின்ற பரிதி காணச் சென்றிடிற் கண்ணே போதும், விரிகின்ற சகத்தைக் காண விருத்தியும் பலமும் வேண்டும், புரிகின்ற விருத்தி யொன்றே போதுமெய்ப் பொருள்காண் போர்க்கே. 13

விருத்தியும் பலமுங் கூடும் விகாரமே மநமென் பார்கள், கருத்தெழு விருத்தி வேண்டுங் கணக்கிஞன் மநத்திற் கெட்டும், வருத்திய பலமா மிந்த மநத்திற்கெட் டாது கண்டாய், அருத்தமிப் படியென் றைய மகன்றுநீ தெளிந்தி டாயே. 14

வஞ்சகமில் பரமார்த்த குருவே சொன்ன வழிகளறிந் தேனினியோர் வசநங் கேளீர், சஞ்சலமற் றகண்டபூ ரணமாய்ச் சித்தந் ததாகார மாவதன்றோ சமாதி யோகம், உஞ் சலேயாத் தலேவதுதன் சுபாவ மாகி யொரு கணத்திற் பலவுலகா யதிக்கு மிந்த, நெஞ்சகம்வத் துவிலசையா திவாத தீப நிலேயடைவ தெப்படியோ நீர்சொல் வீரே. 15

கருதுமநோ குணமுன்று மூன்றி லொன்றுகதித் தெழுந்தான் மற்றிரண்டுங் கரந்து நிற்கும், தருமமிகுஞ் சத்துவமே லான போது சன்மார்க்க மானதெய்வ சம்பத் துண்டாம், மருவுரசோ குணமாகி லுலக தேக வாதனையாஞ் சாத்திரவா தனையு மாகும், அரு

மகனே தமோகுணமே லான போதி லசுர சம்பத் துண்டாகு மறிந்து கொள்ளே. 61

மநதுசத்து வசொரூப மற்றிரண்டும் வந்துகலக் தனவவற்றை மாற்றி ஞற்போம் தனதுசந்மார்க் கத்தைவிடா திருந்த போது தமோகுணமும் ரசோகுணமுஞ் சமிக்கும் பின்னைக், ஞபரிணு மஞ்சலநம் போம்போ னக்காற் களங்கமற்று நின்றவா காசம் போ லும், நினதுளமப் படியாமப் பிரமத் தொன் றாய் நிருவிகற்ப சமாதியிலே நிற்குந் தானே.

களங்கமற்ற கண்ணுடி தன்முன் வே ரோர் களங்கமற்ற கண்ணுடி காட்டும் போ து, விளங்கியதந் மயமாகி யபேத மாகி விக ற்பமின்றி நிருவிகற்ப மாறுற் போல, அளங் தறியப் படாவிபுவாய்ச் சத்தாய்ச் சித்தாயா நந்தமாம்பிரமத் தைச்கியமான, உளந்தெளி ந்த படியிருந்தா லுலக மெங்கேயுலெவெங்கே யென்றுசங்கை யொழித்தி டாயே. 18

ஏகமாய் மநமிறந்தாற் சீவங் முத்த நிருக்குமட்டும் பிராரத்த மெதிரு லுண்பார்,

போகமா னதுபுசித்துத் தொலைப்ப தன்றோ புசிப்பதென்றான் மநந்தானும் போன தன்றே, சோகமா மநமிறந்தாற் போக மில்லை தோன்றுமெனின் முத்தரென்று சொலக் கூடாதே; மோகமா மிதுதெளியக் குருவே நன்றா மொழிந்தருள்வாய் தெளிந்ததன்றோ முத்தி தானே. 19

மநநாசஞ் சொரூபமென்று மரூப மென்றும் வகுத்துரைப்பா ரிருவகையா வருமி வற்றில், வினவாத சீவந்முத்த ரிடத்தி லொன்றும் விதேகமுத்த ரிடத்திலொன்று மேவுங் கண்டாய், தனதான சத்துவமாய் மநஞ்சேஷித்துத் தமசுரச சுகணசித்தல் சொரூப நாசம், அநகாசத் துவந்தானு மிலி ங்க தேக மடங்கும்போ தடங்குதலே யரூப நாசம். 20

சுத்தமாஞ் சத்துவமே யுண்மை யாகுந் துகளிருள்போ னான்மநமென் சொல்லும் போம்போம், வர்த்தமா நத்தில்வந்த வுணவை யுண்பார் வருவதும்போ வதுநினைந்து

மகிழார் வாடார், கர்த்தரா மகந்தையைவிட்
டகர்த்த ராகிக் கரணவிருத் திகளவத்தை
காண்பா ராகி, முத்தரா யிருக்கலுமாம் புசிப்
புங் கூடு முட்டிலையென் றறிந்துசங்கை மோ
சிப் பாயே. 21

விவகார வேளையெலாஞ் சமாதியென்
றால் விகற்பமன்றே மனமலைந்து விடாதோ
விட்டால், அவதாந நழுவுமன்றோ வென்று
யாகி லதற்கொருதிட் டாந்தங்கே ளாசை
கொண்டு, நவமாகப் பரபுருடன் றன்னைக்
கூடிநயந்தசுக மநுபவித்தநாரி நெஞ்சந், தவ
மாக மனைத்தொழில்கள் செய்யும் போதுந்
தழுவியநு பவித்தசுகந் தனைவி டாதே. 22

தேகத்த னவனாகி யகர்த்த னாகிச் சீவ
னின்றிப் பிரமமாய்த் தெளிந்த முத்தன்,
போகத்தை யுண்பனென்றாற் கருத்தா வா
மே பூரணமா மகர்த்தனுக்குப் போக முண்
டோ, சோகத்தை யறுத்தருளுங் குருவே யிந்
தத் துகளறுக்க வேண்டுமென்று சொன்ன

யாகில், மாகர்த்தன் மாபோகி மாத்தி யாகி
வகைமூன்று யவரிருக்கு மகிமை கேளாய்.

செய்கையுஞ்செய் விக்கையுமற் றிருக்
குஞ் காந்தச் சிலைமலைமுன் னிரும்புகள்சேட்
டிக்குமாபோல், செய்கையுஞ்செய் விக்கையு
மற் றிருக்குமென்முன் செடமான வுலக
மெலாஞ் சேட்டை செய்யும், மெய்கலந்த
விந்திரிய விகார ரூப விவகார விருத்திக்கும்
விருத்தி தானு, மெய்கலந்த சமாதிக்குஞ்
சாட்சி யேநான் வெயில்போலென் றுரைத்
தவனே விபுமா கர்த்தன். 24

அறுசுவையின் குணங்குற்ற மசுத்தஞ்
சுத்த மபத்தியம்பத் தியமெனவூ ணைந்தி
டாமல், பொறுமை யுடன்கிட்டினதைக் கா
ட்டுத் தீப்போற் போகங்கள் புசிப்பவன்மா
போகி யாகும், சிறிதுபெரி துகடன தந்நிய
ங்க ணன்மை தீமைகள்சே ரினும்படிகச்செ
யல்போற் சித்தம், வெறிதிருக்கு மவனே
மாத் தியாகியாவன் விரதமிம்மூன் றுடைய
வரே வீடு ளோரே. 25

மெய்யுங் கொண்டுபி ராரத் தந்தரு விதி வழி நின்றிடவும், உய்யுங் கர்மிக ளுக்கநு குணமா வுறுதொழில் செய்திடவும், செய் யுஞ் செய்கைமு டிந்தவ னென்றுரை செப்புவ தெப்படியோ, நையுந் துன்பம கற்றிய குருவே நலமா வருள்வீரே. 26

ஆடவர் செய்தொழின் மூவகை யாகும வித்தை வசத்துறுநாள், வடனேமமதைய கந் தையு ளார்க்கே யிகபர விவகாரம், வீடனு குவமெனு மிச்சையு ளார்க்கே வித்தைப டிப்பதெலாம், பாடன்மி குந்தொழி லாற்பல னுண்டோ பரிபூரணமானல். 27

சூரவர்சி காமணி யேகே ளீர்நீர் கூறின வழியொக்கும், பரமுட் னிகமுமி ழந்தவ ரன் றே பழகுவர் மெஞ்ஞானம், விரவுமு யற்சி யின் மீண்டவ ரதையினி வேண்டுவ ரோ வேண்டார், சிரவண மநநா திகள்வேண் டா வோ சித்தமு றைத்திடவே. 28

கேளர்மக னேகேள் தத்துவ மறியார் கேட்டல்செ யக்கடனே, தௌர்வுறு சிந்தித்

தலின்முயல்வார்சிலர் சந்தே கங்களுளார்,
தெளிதலி னிற்பார் விபரீ தப்பேய் தீரா வா
தனையோர், வெளியுரு வாயறி வாய்நிறை
வாயினர் வேண்டுவ தொன்றுண்டோ. 29

ஐயா கேளீர் தத்துவ ஞானியு மஞ்ஞா
நிகள்போலே, செய்யா நின்றேன் கண்டே
னுண்டேன் சென்றே னெனலாமோ, பொ
ய்யாம் விபரீ தங்கள வற்குப் போயின வெ
ன்றீரே, மெய்யாம் பிரமவி சாரமி தன்றே
வெளியா வுரையீரே. 30

ஓய்ந்தக நாவிற் கண்டப ழங்கதை யோ
துவன் வாதனையால், ஆய்ந்தறி வுற்றவ னப்
படி செப்புவ னாபா சனுமாகான், மாய்ந்தத
னுடல்வே மளவும் விண்ணவன் மநுடனெ
னப்படுவான், வீய்ந்தசி தாபா சன்போ மள
வும் விவகா ரந்தொடரும். 31

ஆனா லையா குருவே காண்ப தசத்திய
மென்றாலும், நானா விவகா ரந்துய ரலவோ
ஞானசு கந்தருமோ, போனா லன்றோ நன்றா

நிட்டை பொருந்திடல் வேண்டாவோ, தானு நிட்டை புரிந்தாற் செய்கை தவிர்ந்தவ னெப்படியோ. 32

ஞேரிதரு மகனே யாரம் பத்தொடு தீரும் விவகாரம், உரியதி யாநமும் விவகாரங்களு முள்ளத் தொழிலன்றோ, துரியபரம்பொருளானவர் வேறொரு தொழில்செய்வதுமுண்டோ, அரியச மாதிகள் பழகுவனேலவ னொரு டனுமன்றே. 33

உத்தம குருவே யாரு டருமா யொரு தொழி லற்றவருள், சித்தம டங்குதி யாநாதிகள்சிலர் செய்குவ தென்னென்றால், இத்தல மருவும் பிராரத் தப்பிறி வெப்படி யப்படியே, முத்தரும் வெகுவித மாகுவ ரென்பது முன்னே சொன்னேனே. 34

நல்லவ னேகே ளுலகுப காரம் ஞாநிகள் விவகாரம், அல்லது வேறொரு பெறுபே றும்மிலை யதனாற் பிணியுமிலை, வல்லசிருட்டிமு தற்பல தொழிலால் வருபுண்ணிய

பாவம், எல்லவ ருக்கும நுக்கிர கஞ்செயு
மீசன டைந்திலனே. 35

ஈசனு மாயரு வாயுரு வாகியெ ழுந்தரு
ளுங் குருவே, ஈசனு ஞாநியு மொப்பென்
றீரே யெப்படி யொப்பென்றால், ஈசனு ஞா
நியு மமதைய கந்தையி கந்தநி னொலொப்
பாம், ஈசனு மாம்பல சீவரு மாமுல கெல்லா
மிவனுமே. 36

எல்லாச் சீவரு மிவனு மென்றீ ரிவன்
றான் முத்தியடைந், தெல்லாச் சீவரு முத்தி
பெ றாமலி ருப்பா னேனையா, எல்லாச் சீவ
ரும் வெவ்வே றானு லிவனெல் லாமலனே,
எல்லாப் பொருளு முரைத்தருள் குருவே
யிதைநீர் மொழியீரே. 37

அகமெனு மாத்மா பூரண மேகம நே
கவி தஞ்சீவர், அகமெனு மந்தக் கரணே பா
திக ளளவிலே யாதலினுல், சகமுழு துங்கு
ளிர் சந்திர னேகஞ் சலசந் திரர்பலராம், சக
மதி லேரிகு ளஞ்சிறு குளிசால் சட்டிகு டம்
பலவால். 38

சட்டிகு டங்களி லொன்றுந சித்திடி னதினுட் சலசந்திரன், ஒட்டுமு தற்சந் திர னொடு கூடுமொ ழிந்தவை கூடாவே, கட் டுமு பாதிந சித்திடு சீவன் காரண வான்மா வில், கிட்டுமெ யிக்கிய மூபாதிகெ டாதவர் வல மாகாரே. 39

இவனயன் மால்சிவ னாகிய வீசரொடொப் படி யொப்பாவன், சிவன்முதன் மூவரு மகிலசி ருட்டி திதிநா சங்கள் செய்வார், அவ ர்பிறர் மதிகளு முக்கா லங்களுமறிவார் விபு வாவார், தவமிகு குருவே யிவனுக் கவையி லொர் சற்றுங் காணேனே, 40

நடத்து நீர்நிலாத் திரியொளி யுபயமுந் தழுமூவர் தனைக்காக்கும், குடத்து நீர்விளக் கினிலொளி யிரண்டுமோர் குடும்பமாத் திர ங்காக்கும், அடுத்த மைந்தனே ஞானியு மீச னு மறிவினாற் பிறிவில்லை, கெடுத்த மாயை யின் குணங்களான் மேலென்றுங் கீழென் றும் பிரிவாமே. 41

நரரின் மன்னனைச் சித்தரைப் போல
வே நாரணன் முதலான, சுரர்கண் மாயை
வல் லவரணி மாதிக டொக்கமா தவமிக்
கோர், தரணி மாநுடர்க் கவைகளில் லாமை
யாற் றாழ்வுள ராளுலும், பிரம பாவனை யா
லிவ ரவரெனும் பேதமொன் றிலைபாராய்.

முத்தி நல்கிய சற்குரு வேபல முநிக
ளுக் கணிமாதி, சித்தி பூமியிற் கண்டிருக்
கவுமந் தச்செல்வமீ சனதென் றீர், புத்தியொ
த்திட வுரைத்தருளென் றிடிற் புகழுமீ சனை
நோக்கிப், பத்தி செய்திடுந் தவத்தி னலியோ
கத்தாற் பலித்ததென் றறிவாயே. 43

சிவசொ ரூபமாந் தேசிக மூர்த்தியே சித்
திமுத் தியிரண்டும், தவமு ளோரடை குவ
ரெனி லவர்கள்போற் சகலரு மடைவாரே,
அவர்கள் பூருவஞ் சித்தியு ஞானமு மடைந்த
துங் கண்டோமே, இவர்கண் ஞானிக ளென்
றிடிற் சித்திக ளிவர்க்கிலா வகையேதோ.

காமி யத்தவங் காமிய மொன்றையுங்
கருதிடாத் தவமென் றும், பூமி யிற்றவ மிரு

வகை சித்தியும் போதமுந் தருமைந்தா, ஆமி வற்றிலொன் றியற்றினு லொன்றையே யடைகுவ ரிது தீர்வை,யாமுரைத்தவவ் விர ண்டையு மியற்றினு ரன்றுள பெரியோரே.

அநக மைந்தனே முத்திஞா நத்தை யே யடைந்தன ரல்லாமல், ஜெநகன் மா பலிபகீரதன் முதலினோர் சித்திகள் படித்தா ரோ, இனிய சித்தியே விரும்பினர் சிலர்சில ரிரண்டையு முயன்றுராம், முனிவர் சித்திகள் விநோதமாத் திரந்தரு முத்தியைத் தாராவே

யோக ஞாநமே முத்தியைத் தருமெ னிலொழிந்தசித் திகள்வேண்டி,மோக மாயு டல் வருந்தினர் சிலசில முத்தர்களேனென் றுல், போக மாய்வரும் பிராரத்த கர்மங்கள் புசித்தன்றே நசித்தேகும், ஆகை யாலந்தச் சித்திகள் பிராரத்த மாகுமென் றறிவாயே.

இலக்க மாயிரஞ் சுருதியா லூகத்தா லென்மந மசையாமற், பெலக்க வேண்டு மென் றருள்குரு வேயகப் பிராந்திபோய்த்

தெளிவானேன், துலக்க மான்கண் ணடி யை யடிக்கடி துலக்கிறுற்பழுதன்றே, அல க்கண் மாற்றிய தேவரீ ரெனக்குரை யமிர் தங்க டெவிட்டாவே. 48

கைத வங்களைச் சாத்திரஞ் சொல்லு மோ கருணையாலெனையாளும், ஐய னேகுரு வேயெவ ராகிலு மநுபவித் தாலன்றிச், செ ய்த கர்மங்கள் விடாவென்ற வசநமுஞ் செ ந்மசஞ் சிதம்வேவத், துய்ய ஞாநத்தீச் சுடு மென்ற வசநமுந் துணிவதெப் படிநானே.

சீவ பேதங்க ளளவிலை மைந்தனே செ ய்கையு மளவிலை,ஆவ வாமவ ரவரதி காரங் க ளறிந்துபக் குவநோக்கிப், பூவ லர்ந்துபின் பலங்கள்காட் டிவனபோற் பூருவஞ் சித்தாந் தம், காவல் வேதங்க ளிரண்டையும் வசநிக் குங் காண்டமூ வகையாலே. 50

ஆனபாவிக ளடைவன நரகங்க ளவசிய மாஞலும், தான மந்திர விரதவோ மங்களா ற் றவிருமென் பதுபொய்யோ. ஈன மாம் பல் சந்மசஞ் சிதவினை யெத்தனை யாஞ

லும், ஞாந மாங்கனல் சுடுமென்ற மறை மொழி நம்பிஞல் வீடுண்டே. 51

என்மநந்திருக் கோயிலாத் தினங்குடியிருந்தருள் குருமூர்த்தி, சென்ம சஞ்சித வினைகள்வே றறுத்திடுந் தேவரீர் மெய்ஞ்ஞாநம், தந்ம யந்தரு மகிமையை விபுதராஞ் சமர்த்தரு மறியாமல், கன்ம மாங்குழியினில் விழுந்தழிகின்ற காரணமுரையிரே.

அழிவி லாததற் பதந்தனை மைந்தனே யகமுகத் தவர்சேர்வர், வழிநடப்பவர் பராமுக மாயிஞன் மலர்ந்தகண் ணிருந்தாலும், குழியில் வீழ்வர்கா ணப்படி வெளிமுகங் கொண்டுகா ம்மிகளாஞேர், பழித ரும்பிறவிக்கட லழுந்துவர் பரகதி யடையாரே. 53

சிறந்த நன்மையுந் தீமையு மீசஞர் செய்விக்குஞ் செயலன்ழே, பிறந்த சீவர்களென்செய்வா ரவர்கண்மேற் பிழைசொல்லும் வழியேதோ, துறந்த தேசிக மூர்த்தியே யென்றிடிற் சுருதிநூற் பொருண்மார்க்கம், மற

ந்த மூடர்கள் வசிக்கும் பிராந்திகாண் மை
ந்தனே யதுகேளாய். 54

திகழ்ந்த வீசனார் சிருட்டியுஞ் சீவனார்
சிருட்டியும் வெவ்வேறே, சகந்த னிற்பொது
வீசனார் சிருட்டிகள் சராசரப் பொருளெல்
லாம், அகந்தை யாமபி மாநங்கள் கோபங்க
ளாசைக ளிவையெல்லாம், இகழ்ந்த சீவனார்
சிருட்டிக ளாகுங்கா ணீசனார் செயலன்றே.

மூவ ராம்பரன் சிருட்டிக ளுயிர்க்கெலா
முத் திசா தனமாகுஞ், சீவனார்செய்யுஞ் சிருட்
டிக ட்ங்களைச் செனிப்பிக்கும் பிணியாகும்.
தாவ ராதிக ணசித்திடி லொருவர்க்குஞ் சகந
ங்கள் நசியாவாங், கோப மாதிகள் நசித்திடிற்
பந்தமாங் கொடும்பிற விகள்போமே. 56

ஈசர் காரியம் பிரளயத் தொழியவு மெ
வர்பவ மொழிந்தார்கள், தேச காலதே காதி
க ளிருக்கவுஞ் சீவகா ரியமோகம், நாச மாகி
ய விவேகத்தி னுயிரொடு ஞானமுத் தர்களா
னார், பாச மோகங்கள் பசுக்களின் செயலன்
றிப் பசுபதி செயலன்றே. 57

அச்சுவத்தமென் றொருமர மதிலிரண்
டரும்பறவைகள் வாழும், நச்சு மங்கொருபற
வையும் மரக்கனி நன்றுநன் றெனத்தின்னு
ம், மெச்சு மங்கொருபறவை தின்றதென
வியங்கியப் பொருளாக, வைச்சு மாமறை
சீவனை யீசனை வகுத்தவா றறிவாயே. 58

இந்தச் சீவனால் வருமறு பகையெலா
மிவன்செய லென்னாமல், அந்தத் தேவனால்
வருமென்ற மூடர்க ளதோகதி யடைவார்
கள், இந்தச் சீவனால் வருமறு பகையெலா
மிவன்செய லல்லாமல், அந்தத்தேவனாலன்
றெனும் விவேகிக ளமலவீ டடைவாரே.

நலமெய் யையனே யெல்லவர்க் குந்தெ
ய்வ நாயகன் பொதுவானால், சிலரை வாழ்
வித்தல் சிலரொடு கோபித்தல் செய்வதே
னென்றாயேல், குலவு மக்களைத் தந்தைபோ
ற் சிட்டரைக் குளிர்ந்துதுட் டரைக்காய்
வன், கலைக ணல்வழி வரச்செயுந் தண்ட
முங் கருணையென் றறிவாயே. 60

மனைவி லங்கறு மைந்தனே கற்பக மரங்
கனல் புனன்மூன்றும், தனை யடைந்தவர்

வறுமையுஞ் சீதமுந் தாகமுந் தவிர்த் தாளும்,
அனைய வீசனு மடைந்தவர்க் கருள்செய்வ
னைக்னறவர்க் கருள்செய்யான், இனைய குற்
றங்க ளெவர்குற்ற மாகுமென் றெண்ணிநீ
யறிவாயே. 61

ஒன்று கேண்மக னேபுமான் முயற்சி
யா லுரைத்துமா நடர்க்கீசன்; நன்று செய்
யவே காட்டிய நூல்வழி நடந்துநல் லவர்பி
ன்னே, சென்று துட்டவா தனைவிட்டு வி
வேகராய்ச் செகித்தமா யையைத்தள்ளி,
நின்று ஞாநத்தை யடைந்தவர் பவங்கள்போ
நிச்சய மிதுதானே. 62

இந்த ஞாநந்தான் வருவதெப் படியெ
னி லிடைவிடா விசாரத்தால், வந்தடைந்தி
டும் விசாரந்தா னேதெனின் மநதியாஞ்
சரீரத்தில், இந்த நானெவன் சித்தெது சட
மெது விரண்டுமொன் றாக்கூடும், பந்த மே
துவீ டேதென வுசாவுதல் பகர்விசா ரமதா
கும். 63

போன சன்மங்க டமில நுட் டித்தநற்
புண்ணிய பரிபாகம், ஞாந மாக்குமே விசா

ரமே னென்றிடி ஞமுறைத் திடக்கேளாய், ஆன புண்ணிய மீசுரார்ப் பணஞ்செயின சுசி போஞ் சுசியாகும், மாந தம்பினை விசாரி த்து ஞாநத்தை மருவுமென் றறிவாயே.

பத்தி யும்வயி,ராக்கிய மும்பர லோகமு மணிமாதி, சித்தி யுந்தவ கிட்டையும் யோக முந் தியாநமுஞ் சாரூப, முத்தி யுந்தரும் விசித்திர கருமங்கண் மேகாமாத் திரந்தள் ளும், புத்தி தந்திட லருமையோ விசாரமே ன் புண்ணிய குருமூர்த்தி. 65

வேட மாறிய பேர்களை யறியவே வே ண்டினன் மகனேகேள், கூட மாமவர் சுபா வங்கள் சீலங்கள் குறிகளாய்ந் தறியாமல், ஒடி யுங்குதித் தூந்தலை கீழ்நின்று முயர்ந்த கம் பத்தேறி, ஆடி யும்பல கருமங்கள் செய் யினு மவருண்மை தெரியாதே. 66

இன்ன வாறந்தப் பிரமத்தை யறிவிக்கு மிலக்கணத் தால்வே,தம்,சொன்ன ஞாநமும் விசாரத்தால் வருமன்றிச் சுருதிநூல் படித் தாலும், அந்ந தாநங்க டவங்கண்மந் திரங்

களா சாரங்கள் யாகங்கள், என்ன செய்யி
னுந் தன்னைத்தா னறிகின்ற திவைகளால்
வாராதே. 67

துளங்கு தர்ப்பண மழுக்சறக் கைக்கொ
ண்டு துலங்கினுற் போமன்றி, விளங்குபுத்தி
யா லுலகிலார் துலக்கினுர் விமலதே சிக
மூர்த்தி, களங்க மாகுமஞ் ஞாநமு மப்படிக்
கருமத்தாற் கழுவாமல், உளங்கு றித்தஞா
நத்தினு லெப்படி யொழியுமீ தருள்வீரே.

தர்ப்ப ணத்தினிற் களிம்புவாஸ் தவம
லஞ் சகசமா தலின்மைந்தா, கற்ப ளிங்கினிற்
கருநிறஞ் சகசமாக் கறுத்ததன் றுரோபம்,
தர்ப்பணத்தினி லழுக்கற வேண்டினுர் சாத
நத்தொழில்வேண்டும், கற்ப ளிங்கிலாரோப
மே கறுப்பென்று கண்டிட மநம்போதும்.

இங்கு மப்படிச் சச்சிதா நந்தத்தி லிடர்
சடம் பொய்மூன்றும், தங்கு மாயையின் கற்
பித மன்றியே சகசவாஸ் தவமன்றே, பங்க
மாகுமஞ் ஞாநத்தைக் கருமங்கள் பகைசெ
யா துறவாக்கும், துங்க ஞாநமே கருமவஞ்
ஞாநத்தைச் சுடுகின்ற நெருப்பாமே. 70

மனைக்குள் வைத்தபண் டங்களை மறந்
தவன் வருடநா றழுதாலும், நினைத்துணர்
ந்தபின் இட்டுமெப் படியிந்த நின்மல வான்மா
வும்; அநர்த்த மான தன் மறதியைக் கெடுத்
துத்தன் னறிவினாற் காணாமல், கனத்த கர்
மங்க ளாறுகஞ் செய்யினுங் காணுமோ கா
ணாதே. 71

நன்மை யாங்குரு வேசுகந் தருவது ஞா
னமே யெனும்வேதம், தன்ம பாவமிச் சிரங்
களாற் றேவர்க டருவிலங் குகண்மாந்தர்,
செந்ம மாகுவ சாதியா சாரமே செய்தவஞ்
சுகமென்று, கன்ம காண்டத்தில் விதித்த
தென் விதித்துள காரண முறையீரே. 72

திங்மு மண்ணுகர் பிள்ளைநோய்க் கிரங்
கியே தீம்பண்ட மெதிர்காட்டிக், கனம ருந்
துகளொளித்துவைத் தழைக்கின்ற கருணை
நற் றாய்போலே, மனைய றங்கள்செய் மகங்
கள்செய் நன்றென்று மலர்ந்தவா சகஞ்சொ
ல்லும், நினைவு வேறுகாண் சுவர்க்ககா மிகள
ந்த நிண்ணயந் தெரியாரே. 73

போக மாருயிர் கண்டதை யுண்பதும்
புணர்வது மியல்பேகாண், ஆக மங்களுஞ்
சுபாவத்தை விதிக்குமோ வத்தனை தெரியா
தோ, காக மேகஜத் திடுநெருப் பேசுடு கசந்
திடு வேம்பே நீ, வேக வாயுவே யசையென
வொருவரும் விதித்திடல் வேண்டாவே. 74

கள்ளு மூனுநீ விரும்பினன் மகங்கள்
செய் காயத்தின் மநதானல், கொள்ளும்
பெண்டொடு கலவிசெய் யெனிலிவன்
குறையெலாந் தொடானென்றே, தள்ளும்
வேதத்தின் சம்மதஞ் சகலமுந் தவிர்வதே
கருத்தாகும், விள்ளு மிவ்விதி யென்னே
னிற் பூருவ நியமமாம் விதியன்றே. 75

மதுவி றைச்சிக ளுண்ணென்ற சுருதி
பின் மணந்துபா ரெனல்பாராய், மிதுந விச்
சையும் புத்திரோற் பத்தியால் விரும்பென்
ற விதிபாராய், இதையும் விட்டொழி யதிந
யிட் டிகவங்ஙிக் கிகழ்சியற் றதும்பாராய், அ
தைய றிந்துகன் மங்களா சைகளொழிந் தா
நந்த மடைவாயே. 76

உலக மானவஞ் ஞாநமுங் கருமமு முற
வென்ற வழிகூடும், பலவு மானவஞ் ஞாநமு
ஞாநமும் பகையென்ப துளதானல், நிலவி
லேமறுப் போலவஞ் ஞாநமு நிமலஞா நத்
தோடே, குலவி நின்றிந்தச் சிருட்டிகள் செ
ய்யவுங் கூடுமோ குருமூர்த்தி. 77

சொரூப ஞாநமும் விருத்திஞா நமு
மென்று சோதிஞாநமு மிரண்டாம், சொ
ரூப ஞாநமே விருத்தியின் ஞாநமாய்த்
தோன்றும்வே றிலைமைந்தா, சொரூப ஞா
நமஞ் ஞாநசத் துருவன்று சுழுத்தியிற்
கண்டாயே, சொரூப ஞாநத்தின் மருவுமஞ்
ஞாநத்தைச் சுடும்விருத் தியின்ஞாநம். 78

துருத்தி மாயையைச் சுழுத்தியிற் சுடாத
தற் சொரூபஞா நந்தானே, விருத்தி ஞாந
மாய்ச் சுட்டதெப் படியெனில் வெய்யிலா
லுலகெங்கும், பரித்த சூரியன் சூரிய காந்
தத்திற் பற்றியக் கிநியாகி, எரித்த வாறு
போற் சமாதியில் விருத்தியா லெரிக்கு
மென் றறிவாயே. 79

அருளு மையனே திரிவித கரணத்தா
லாகிய தொழி லெல்லாம், கரும மல்லவோ
விருத்திஞா னமுமந்தக் கரணகா ரியமன்
றோ, உரிய கர்மமஞ் ஞானத்தைக் கெடுக்கு
மென் றோதினா லாகாதோ, பெரிய ஞான
மென் றதற்கொரு பெயரிட்ட பெருமை
யை யுரையீரே. 80

விருத்தி ஞானமந் தக்கர ணத்தொடு
விருத்தியா கிலுமைந்தா, ஒருத்தி மக்களே
தங்களிற் பகைக்கின்ற துலகெங்குங் கண்
டோமே, கருத்த னாகிய புருடதந் திரங்க
ளாங் கருமங்க ளவைபோல, வருத்த ஞான
மும் புருடதந் திரமன்று வஸ்துதந் திர
மாமே. 81

வகுத்த கர்மங்கள் செய்யவுந் தவிரவு
மற்றொன்றாக் கவுங்கூடும், மிகுத்த ஞான
மப் படியன்று தியானமும் விவேகஞா னமு
ம்வேறே, செகத்தி லொன்றையொன் றாவி
வன் பாவிக்குந் தியானங்கற் பிதயோகம்,
முகத்த மாக்கண்ட ஞானமே வாஸ்தவ மோ
கமாய் மயங்காதே. 82

கண்ட றிந்தது ஞானங்கேட் டதுத
னைக் கருதுபா வனையோகம், கண்ட பேர்
சொலக் கேட்டது மறந்துபோங் கண்டது
மறவாதே, கண்ட வஸ்துமெய் தியானவஸ்
துக்கள்பொய் கறுவியஞ் ஞானத்தைக், கண்
ட வக்கணங் கொல்வது ஞானமே கருமமன்
றறிவாயே. 83

சருவ முத்தியைத் தருகின்ற தியான
முஞ் சத்திய மன்றென்றால், சருவ முத்தி
யுஞ் சத்திய மன்றென்று சங்கியா தேநீ
கேள், உருவங் கேட்டவன் றியானிக்கும்
பொழுதிலவ் வுருவம்வாஸ் தவமன்றே.உரு
வ மாகுமப் பொழுதுகண் ணுற்கண்ட வுரு
வம்வாஸ் தவமாமே. 84

சடம தாகிய தியானமெய் யாகிய சர்வ
முத் தியைநல்கும், திடம தானதெப் படியெ
னி லவரவர் தியானமே பிறப்பாகும், உடல
மாசையாற் றியானிக்கிற் றியானித்த வுடல்
களா குவர்கமந்தா, தொடர்ப வங்கெடச்
சொரூபமே தியானிக்கிற் சொரூபமா குவர்
மெய்யே, 85

பிரம ரூபத்தைத் தியாகித்த பேர்களும் பிரமமா குவரென்றால், நரச ரீரமாங் குரவனே. விசாரமேன் ஞாநமே னென்றதே, பரம பாவனை பரோட்சமாம் பின்பந்தப் பரோட்சமே யபரோட்சம், திரவி சாரமா ஞாநமா முத்தியாங் தீர்வையீ தறிவாயே. 86

வீட தாம்பரி பூரண சொரூபத்தில் விருத்திஞா நமுங்கூடிச், சேட மாகிற லகண்டமா மநுபவ சித்தியெப் படியென்றால், சாடி நீர்மண்ணைப் பிரித்ததேற் றம்பொடி தானுமண் ணொடுமாயும், ஊடி ஞாநமு மறிவிலா மையைக்கெடுத் தொக்கவே கெடுந் தானே. 87

இந்த நிச்சய முத்தரு ளநுபவ மிருப்பதெப் படியென்றால், சிந்தை யற்றபூ மண்டல விராசனுஞ் சிசுவும்போற் சுகமாவர், பந்த முத்திகண் மறந்துபோ முண்டென்று பலர்சொல்லி னகையாவர், அந்த ரத்தையுண்டு மிழந்ததோர் கொசுகெனு மவர்களை நகையாரோ. 88

மலடி மைந்தனுந் தாணுவிற் புருடனும் வாண்மலர் முடிசூடி, இலகு கந்தர்ப்ப நகரிலே சுத்திகை யிரசதம் விலைபேசிக், கலகமாய்முயற் கொம்பினாற் குத்தியே களைத்திரு வருமாண்டார், அலகை யாயினு ரெனுட்கிவ காரத்தை யறிந்தவன் மயங்கானே. 89

மாயை யென்பது பொய்யெனி லது பெற்ற வகையெலாம் பொய்யாமே, தாயை யன்றிமக் களுக்கொரு பிறவியுஞ் சாதியும் வேறுண்டோ, சேய சொர்க்கமு நகரமு நன்மையுந் தீமையும் பாராமல், தூய சத்துச்சித்தாநந்த பூரண சொரூபமா யிருப்பாயே. 90

பங்க யாசநன் முதற்பல தேவரும் பாருள பெரியோரும், கங்கை யாதியாந் தீர்த்தமுந் தேசமுங் காலமு மறைநாலும், அங்கமாறுமந் திரங்களுந் தவங்களு மசத்திய மெனச்சொன்னால், எங்க ளையக னேயதனாற் குற்ற மில்லையோ மொழியீரே. 91

சேர்ப்ப நந்தனிற் கண்டதைப் பொய்யென்று சொல்வது பிழையானால், அற்ப

மாயையிற் றோன்றிய சகங்களை யசத்தெ
னல் பிழையாமே, சொற்ப நந்தனிற் கண்ட
தைப் பொய்யென்று சொல்லலா மெனின்
மைந்தா, அற்ப மாயையிற் றோன்றிய சக
மெலா மசத்திய மெனலாமே. 92

பொய்யை மெய்யென்ற மூடர்புண்
ணியரென்று புராணங்கூடப் பிமொனல், மெ
ய்யை மெய்யென்ற ஞானிக்குக் குற்றங்கள்
விதித்தசாத் திரமுண்டோ, பொய்ய தே
தெனி னுமரூ பங்களாம் பூதமா கியமாயை,
மெய்ய தேதெனிற் சச்சிதா நந்தமாய் வியா
பிக்கு மாங்மாவே. 93

மாயை யென்பதே தடையரா ரெப்
படி வந்தது வருவானேன், மாயை யென்ப
து பிரமத்தின் வேறெனின் வஸ்துவு மிர
ண்டாமே, மாயை யென்பதும் பிரமமு மொ
ன்றெனின் வஸ்துவும் பொய்யாமே, மா
யை யென்றமே கீங்களுக் கொருசண்ட மா
ருத குருமூர்த்தி. 94

அதனை யின்னதென் றுரைத்திடப்
படாமையா லவாச்சிய வடிவாகும், இதுத
னக்குள துடலியா னுலகுமெய் யெனுமவ
ருடையோர்கள், கதையி லாதபொய் வந்த
திப் படியென்று கண்டபே ரிலைமைந்தா,
விதந மாயையேன் வந்ததென் றற்புத்தி
விசாரமற் றதனாலே. 95

அருவ மாகுமா யாவிவித் தைகள்விளை
யாடுமுன் றெரியாவே, உருவ மாம்பல கந்
தர்ப்ப சேனையா யுதித்தபின் வெளியாகும்,
பிரம சத்திக ளநந்தமா மதைக்கண்டு பிடி
த்திடல் கூடாதே, பரவுபூதங்கள் கண்டநு
மாநத்தாற் பலருக்கும் வெளியாமே. 96

காரி யங்களுஞ் சத்தியா தாரமுங் கா
ணுமற் றதுமாயம், பாரி னின்றமா யாவி
யுஞ் சேனையும் பார்ப்பவர் கண்காணும், வீரி
யந்திகழ் வித்தையா யினசத்தி வெளிப்படா
ததுபோல, பேரி யற்பிர மத்துக்கு மூல
குக்கும் பிறிதுசத் திகளுண்டே. 97

சத்தி சத்தனைத் தவிரவே றன்றுகாண்
சத்தனு மாயாவி, வித்தை காட்டிய விந்திர

சாலம்பொய் வித்துவான் மெய்போலப், புத்தி மைந்தனே சத்திமா ஞகிய பூரண வாந் மாவின், வத்து நிர்ணயஞ் சொன்னதிட் டாந்தத்தின் வழிசண்டு தெளிவாயே. 98

இல்லை யாகிய சத்தியை யுண்டென்ப தெப்படி யெனக்கேட்கில், புல்லை யாதியா மசேதநப் பொருளெலாம் பூத்துக்காய்ப் பணபாரராய்,நல்லை யாமகனேயதிற் சிற்சத்தி நடந்திடா திருந்தக்கால், தொல்லை யாய்வருஞ் சராசர வுயிர்க்கெலாஞ் சுபாவங்கள் வேறுமே. 99

கருப்பை முட்டையுட் பறவைகள் பல நிறங் கலந்தசித் திரம்பாராய், அருப்ப மாஞ் சத்தி நியமமில் லாவிடி லரசிலா நகர்போலாம், நெருப்பு நீர தாங் கசப்புமே மதுரமா நீசனு மறையோதும், பொருப்பு மேகமாங் கடலெலா மண்களாம் புவநமிப் படிப்போமே. 100

ஆர்க்குங் காணவு மறியவும் படாதென்று மவாச்சிய வடிவென்றும், சேர்க்கு நாமரூ பப்பயிர் வித்தென்றுஞ் செப்பிய சிற்

சத்தி, பேர்க்கு மாறெங்ஙன் பிரித்திடப்ப
டாதெனிற் பிரமபா வனையொன்றாப், பார்
க்கு மாறெங்ஙன் முத்திபா குவதெங்ஙன்
பரமசற் குருமூர்த்தி. 101

வாயுத் தம்பஞ் சலத்தம்ப நம்மணி
மந்திர மருந்தாலே, தேயுத் தம்பஞ் செய்
திடி லதிலதிற் சிறந்தசத் திகளெங்கே, நீ
யச் சச்சிதா நந்தமாய் வேறொன் றுநினைந்தி
டா திருப்பாயேல், மாயச் சத்திபோ மீத
ன்றி மந்திர மறைகளிற் காணோமே. 102

மேவு மண்ணிலவ் வியத்தமே வியத்த
மாம் விவகரித் திடவேண்டில், நாவிஞ்ஞன்
மண்ணைக் குடமென்ப ரக்குட நசிப்பது நா
வாலே, பாவு நாமரூ பங்களை மறந்துமண்
பார்ப்பதே பரமார்த்தம், சீவ பேதகற் பிதங்
களை மறந்துநீ சின்மய மாவாயே. 103

பூரிக் குங்கந சச்சிதா நந்தத்திற்
பொய்சடந் துயர்மூன் றும், தூரத் தாயி
னுந் தோன்றுபாழ் விபரீதந் துடைப்பதெ
ப் படியென்றால், நீரிற் றோன்றுந்தன் னிழ

றலே கீழதாய் நின்றலே யினுநேராய்ப், பா ரிற் றேன்றிய தன்னேநோக் கிடிலந்தப் பாழ்நிழல் பொய்யாமே. 104

ஞானங் காரண மறிபொருள் காரிய நாமரூ பப்பேய்கள், ஆன தெப்படி யழிந்த தெப் படியென வாய்குதல் பலனன்றே, மா ண மைந்தனே தீர்க்கசொப் பநசகம் வந்த தும் பாராமல், போன தும்நினே யாமலுன் போதமாய்ப் பூர்ணமா யிருப்பாயே. 105

அசத்தி லெம்மட்டெண் டம்மட்டும் பரா முகமாகினு லம்மட்டும், நிசத்தி லுள்விழிப் பார்வையா மிப்படி நிரந்தரப் பழக்கத்தால், வசத்தி லுன்மந நின்றுசிந் மாத்திர வடிவ மா யிடின்மைந்தா, கசத்த தேகத்தி லிருக் கினு மாநந்தக் கடல்வடி வாவாயே. 106

தானன்றி வேறென்று மில்லாத பூர ணச் சச்சிதா நந்தகுணமாய், ஊனின்ற வு யிர்தோறு மொன்றாகு மொன்றலஃ தொ க்கின்ற படிகண்டிலேன், நானென்ற சீவன் கள் சத்தான வகையொக்கு ஞானங்கள் வெளி

கண்டதால், ஆநந்த மிதுபோல வெளியாக வுதியாத வடைவேது குருநாதனே. 107

உருவங்க ளிரதங்கள் பரிசங்க ளொரு பூவி லொன்றாகு மென்றாலுமே, கரணங்க ளோரொன்றி லோரொன்று தெரியுங்க ணக்கன்றி வாராதுகாண், அருமந்த சச்சிதா நந்தச்சு பாவங்க ளாத்மாவின் வடிவாகிலும், பிரபஞ்ச மயமாம்வி ருத்திபே தத்தினாற் பேதங்க ளாமைந்தனே. 108

தாமதமி ராசதஞ் சாத்துவித முக்குணத் தால்வரும்வி ருத்திமூன்றாம், ஆமவைகண் மூடமுங் கோரமுஞ் சாந்தமும் மபிதாந மாகுமகனே, எமுறவி ருக்கின்ற சச்சிதா நந்தங்க ளென்றென்று மொன்றாகிலும், நாமுரைக் கும்விருத் திப்பிரிவி னாற்சொ ருப ஞாநாதி பிரிவாகுமே. 109

சடமான மூடத்த ருக்கல்லு மண்களிற் சத்தொன்று மேதோன்றுமால், விடமான காமாதி கோத்தி லாநந்தம் விளையாது மற்ற

வைகளாம், திடமான வொழிவா தி சாந்தத் தி லேசச்சி தாநந்த மூன்றும்வெளியாம், மட மான மூடங்கள் கோரங்கள் விடுசாந்த மக மாகி லாநந்தமே. 110

இகமான குருநாத னேசச்சி தாநந்த மெனுமிலக் கணமறிகிலேன், அகலாத சத் தாவ தேதுசித் தாவதே தாநந்த மேதென் றிடில், மிகுகால மூன் றுங்கெ டாதிருப் பது சத்து வேறுபா டறிதல்சித் தாம், மகிழ்காம நுகர்போது சுசமாகு மநுபூதி வாழ்வென்ப தாநந்தமே. 111

நாசச்ச ரீரத்தி ருக்குஞ்ச ரீரிதனை நால் வேத மாவாக்கியம், நீசச்சி தாநந்த மென்றி டினு மாசிரியர் நீபிரம மாகுமெனினும், மாச ற்ற சச்சிதா நந்தநா னென்னவிவன் மன்னு மநு பவமெங்ஙனே, கோசப்பு ரங்களை யி டித்துத்த கர்க்குமத குஞ்சரக் குருநாதனே.

செங்மாந்த ரஞ்செய்த வினைகளுட றருமெனிற் செல்கால மிவனுண்டலோ, கன்மாநு பவநரக சொர்க்கமெனில் வருகின்

றகாலத்து மிவனுண்டலோ, உன்மாத யாத
னா வுடல்கடவு ளுடன்மநுட வுடன்மாறி
மாறியழியும், தன்மாய வுடல்கெடின் மிவ
னிருப்பது கொண்டு சத்தென்ப தொக்கு
மகனே. 113

இருளாக மூடுஞ்சு ழுத்தியி லிராத்திரி
யி லிரவிசுட ரற்றபொழுது, மருளாம லிரு
ளையும் பொருளையுந் தெரிகின்ற வகைகொ
ண்டு சித்தாகுமே,பெருவாழ்வு மிக்கதானே
தன்னிடத்திற்பே ராதபிரிய மதனால்,அரு
காத பிரியஞ்சு கத்தில்வரு மாதலா லாநந்த
மா மைந்தனே. 114

அந்நபா நாதிசுக சாதநம தாகையா
லார்க்கும்வெகு பிரியமாகும், இன்னவா ருந்
மாவு மாநந்த சாதநமெ னக்கருதல் பொரு
ளல்லவே, சொன்னவாந் மாவையொரு
சுகசாத நங்களொடு சொல்லுவா யாகின்
மகனே. உன்ன தா நந்தம்வே றேதநுப விப்
பதா ருபயவாந் மாவுமுளவோ. 115

விடயசுக மதில்வருதல் பிரியமாத் திரமாகும் வெகுபிரிய மாங்மாவிலாம், விடயசுகம் வருபிரிய மாறிவரு மாங்மாவில் வெகுபிரிய மாறு துகாண், விடயசுகம் விடலுமாங் கொளலுமா மாங்மாவை விடுவதெவர் சொல்வதெவர்பார், விடயசுக போகங்கள் விடுமவனை யவனால்வி டப்படா தொருநாளுமே.

வேகின்ற கோபங்க ளாலென்னை நான் சொன்று விடுகிறே னென்றுசிலபேர், சாகின்ற படியினாற் றன்னையே தான்கொன்று சாவனெனல் சங்கையலவே, தேகந்த னைக் கொல்லு மவனால்வி டப்பட்ட தேகமவ னல்லன்மகனே, ஆகந்த னிற்கோப மலது தனை யொருநாளு மாங்மாவெ றுப்பதிலையே. 117

தூகப்ப டும்பொருளி லும்மகன் பிரியமாங் தநயனிலு முடல்பிரியமாம், ஆகத்திலும்பிரிய மிந்திரிய மாங்கரண மதனிலும் பிரியமுயிராம், ஏகப்பி ராணனிலும் வெகுபிரிய மாங்மாவி லிந்தவாங் மாமுக்கியம்,

ஊகத்திஞற்கௌண மித்தைகர்த் தாமூ
ன்று மோரொன்றி லதிகமகனே. 118

கேடலான பொழுதிவன் காணிக்கு
மகஞன செவுணவாங் மாமுக்கியம், விட
லாத வுடலம்ப ரிக்குநா ளுடலான மித்தை
யாங் மாமுக்கியம். திடமான நன்மைகதி
வேண்டிஞற் கர்த்தஞஞ் சீவவாங் மாமுக்கி
யம், சடமாயு முத்தியினின் ஞானவாங் மா
வான தானேம காமுக்கியம். 119

புலியுமநு கூலமெனி லிட்டமாம் பகை
யெனிற் புதல்வனெனி னும்வெறுப்பாம், உ
லகிலிரு வகையுமல் லாதபுல் லாதியிலு தா
சீந மாமாதலான், மலிநமறு சிங்மயன் பலவ
கையு மிப்படி மகிழ்ச்சியில் விருப்பமிகழான்,
அலகிலா நந்தவடி வாகுமுன் சொரூபத்தை
யாராய்ந்துபார் மைந்தனே. 120

மாநஞ்சி றந்தகுரு நாதனே யாநந்த
வகைகளெத் தனையென்னிலோ, ஞாநந்தி
சழ்ந்தபிர மாநந்தம் வாசநா நந்தம்விட யாநந்
தமென், முநந்த மூன்றுவித மெட்டுவகை

யென்பர்சில ரவ்வைந்து மிதிலடக்கம், யா
னந்த வகைசொலக் கேண்மைந்த னேயெ
ட்டு மிஃதின்ன தின்னதெனவே. 121

போகத்தில் வருசுகம் விடயசுக நித்தி
ரைப் போதுளது பிரமசுகமாம், மோகத்த
நந்தலிற் சுகம்வாச னைச்சுகமு முப்பிரிய
மாநமசுகமாம்,யோகத்தி லுளதுமுக் கியசுக
மு தாசீந முற்றசுக நிசசுகமதாம், ஏகத்தை
நோக்கலத் துவிதசுகம் வாக்கியமெ ழுந்தசு
க ஞாநசுகமே. 122

இவ்வா றுரைசெயுஞ் சுகபே தங்களி
னியல்பா மவைசொல மகனேகேள், ஒவ்வா
நனவினி னுழல்வா னிடர்கெட வுறங்குஞ்
சயநம தூறுநேரம், செவ்வா மநமக முசமா
மதிலொளிர் சித்தின் சுகநிழல் சேருங்கா
ண், அவ்வா றிவனுள மகிழ்வா மநுபவ மது
தான் விஷயசு காநந்தம். 123

ஈனந் தருசுக விடயந் திரிபுடி யிடரா
மெனமந மசையாமல், சேனந் தனதுகுலாய
ந் தனில்விழு செயல்போ னித்திரை செறி

சீவன், தானந் தமில்பர னுடனென் றுவ னொரு தனையல் லதுபிற நினையாமல், ஆநந் தமயனு மாவன் சுகமிகு மதுதா னுயர்பிர மாநந்தம். 124

தூங்குஞ் சுகமது பிரமச் சுகமெனல் சுருதிப் பொருள்விழி துயில்வோர்கள், தா ங்கும் மலமிணை நன்று கச்சிலர் சம்பா திப்ப து தானாகம், தீங்குந் நன்மையு மாண்பெண் முறைமையுந் தெரியா தம்ளிசெய் பொழு தேபோல், ஆங்குள் வெளிகளு மறியா வநு பவ மதனு லதுபிர மாநந்தம். 125

உதவும் புவியினி லொருவன் னநுபவ மொருவன் மநதினி லுதியாதே, மதியுங் கெடுநிற துயில்கொண் டாநந்த மயனென் றேசுக முறுகின்றான், இதுவிஞ் ஞாந மய னுஞ் சிந்தையி னினைவாய் வந்திட லழகன் றே, சுதைவிண் ணோர்புகழ் குருவே நீரிது சொல்லீர் சகலமும் வல்லீரே. 126

நெய்யும் வெண்ணெயு மிருபேர் களு மறி நினைவிற் பிறிவறி வினிலில்லை, செய்

யுங் நனவினி லிறுகும் மநதொடு சேருஞ் சிந்மய விஞ்ஞாநன், னையுந் துயர்மந நழுவும் பொழுதுணர் ஞாநச் சுகமுனு மாநந்தன், பெய்யுந் துளிகளு நீருங் குளமொடு பாகும் போலிவர் பிறிவன்றே. 127

ஒன்றா கியபிர மாநந் தச்சுக மொழிவானேன்வெளி வருவானேன், என்றான் முன்செய்த கருமம் வெளியினி லிழுக்குஞ் சுழத்திவிட் டெழுந்தோனும், நன்றா யினசுக மகலான் வெளியிலு. நடவான் மறதியும் பெறமாட்டான், அன்றா மெனவிருந் துறங்குஞ் சிலகண மதுவே வாதனை யாநந்தம்.

அந்தக் கணமுட்- லகமென் றிடர்களி லலைந்தே சுகந்தனை மறந்தேபோம், முந்தைச் செயும்வினை சுகதுக் கந்தரு மோநந் தருநடு வடிவேகாண், எந்தப் புருடனு மொருசிந் தையுமற விருந்தே னெனலநு பவமாகும், இந்தப் படிதனு தாசீ நச்சுக மிதுவேமெனு மாநந்தம். 129

நிசமா னதுமுக் கியமோ குடத்துள நீரன் றேவெளி யீரந்தான், வசமா வகங்கா

மறைந்தா னிசமது படிந்தான் முக்கிய வகை யாகும், திசையார் திரிசய மறியா தேதுயில் செறியா தேயுட றறிபோலே, அசையா தேமதி சமமா கியநிலை யதுதான் முக்கிய வாநந்தம். 130

மநுடன் மநுடகந் தருவன் றேவநன் மாகந் தருவெணுண் பிதிரோடே, பனுமா ஜாநர்கள் கருமத் தேவர்கள் பகர்முக் கியரிந் திரனுசான், கனமார் பிரஜா பதியென் விரா ட்டுபொன் கர்ப்பப் பிரமனென் றின்னோர் கள், பினவா நந்தங்க ளுரையாம் பிரளய வெள்ளக் கடல்பிர மாநந்தம். 131

எவனு கிலுமிந்தத் துரியா தீதத்தி லேழாம் பூமியி லிருந்தானேல், அவனு ரத ன்சுகன் சிவன்மா லயன்முத லறிவோ ரநு பவ சுகபோதம், விவகா ரதிர்சய மிதுவே யநுபவ மெனமுன் சொல்லிய விவகாரி, உவமா நமுமறி மகனே யவனடி யுதிரும் பொடிகளென் முடிமேலே. 132

இந்தவா றைந்துசுகஞ் சொல்லினோம் வித்தைசுக மினிமேற் சொல்வோம், முந்த

மா யையுஞ் சச்சி தானந்தப் பொருளுமே
மொழியும் போதில், அந்தமா மத்துவித சுக
மாந்ம சுகமிரண்டு மங்கே சொன்னோம்,
தொந்தமாற் றியமகனே யின்னமுனைக்
கையமுண்டேற் சொல்லுவாயே. 133

துகன் றனையு மெனை யுமுல கினையுமீன்
றளித்தருளுங் குருவே கேளீர், புகன்றசச்சி
தானந்தப் பதங்கடனித் தனியாகிப் பொருள்
வேறானால், உகண்டமாக முறைப்பதெங்ங
ன் பரியாய பதங்களைப்போ லுறவு காணே
ன், அகண்டமா யொருசுவையாய்த் தேனீக்
கூட் டியமதுவா யறிவிப் பீரே. 134

துளிரிளகல் வெண்மையென்ற பதங்க
ளினீர்மூன்று கூறா யிற்றோ, ஒளிதவ
ளுஞ் செம்மையென்ற பதங்களா லக்கினியு
மொருமூன் றாமோ, வெளிமுதலாஞ் சக
மசத்து மூடமிட ரெனப்பிரித்து விலக்கி
வேதம், எளிதறிய முரண்மொழிந்த சத்தா
தி யெனும் பிரம மேகந் தானே. 135

நித்தியம்பூ ரணமேகம் பரமார்த்தம் பர
ப்பிரம நிதானஞ் சாந்தம், சத்தியங்கே வலந்

துரியஞ் சமத்திருக்குக் கூடஸ்தன் சாட்சி
போதம், சுத்தமிலக் கியஞ்சநா தநஞ்சீவன்
றத்துவம்விண் சோதி யாத்மா, முத்தம்விபு
சூக்குமமன் றிவ்வண்ணம் விதிகுணங்க
ண் மொழியும் வேதம். 136

அசலநிரஞ் சநமமிர்த மப்பிரமே யம்
விமலம் வசநா தீதம், அசடமநா மயமசங்க
மதுலநிரந் தரமகோ சரம கண்டம், அசம
நந்த மவிநாசி நிர்க்குணநிட் களநிரவ யவம
நாதி, அசரீர மவிகார மத்துவித மெனவி
லக்கா மநேக முண்டே. 137

இன்னவகை விதிவிலக்குக் குணங்
கணன்றாய்ச் சேர்ந்தொருமித் தெல்லாங்
கூடிச், சொன்னபொரு ளொன்றன்றி யிர
ண்டில்லை யொருபொருளைச் சொல்லுஞ்
சொற்கள், பிங்பேத மாமதனாற் சத்தாதி
குணப்பொருளாம் பிரம மேகம், அன்ன
பொருந் ளொருமையறிந் தகண்டபரி பூரண
மா யாவாய் நீயே. 138

நிர்க்குணவத் துவின்குணங்க ளுரைப்
புதுசாய் மலடிமெயன நிகரென் றோதே, சற்

குணனே வத்துநிலை யுரையாம லறியவல்ல
சதுர ருண்டோ, நற்குணமே தங்களிந்தச்
சீவன்முத்தி பெறப்பிரம ஞானந் தோன்றச்,
சொற்குணங்கள் பிரமத்தின் குணங்களன்
று பிரமமாஞ் சொரூபந் தானே. 139

மோகவிருள் கெடககோடி யருணனெ
ன வருகுருவே மொழியக் கேளீர், ஏகபரி
பூரணமா மென்சொருப மென்னுளத்தி
லிறுகும் வண்ணம், ஆகமங்கள் சொன்னபடி
யென்னையகண் டார்த்தமா வறிந்தேனையா,
ஊகமுமொத் திடவுரைத்தாற் பசுமரத்தி
லாணிபோ லுறைக்கு நெஞ்சே 140

சத்தேசித் தாகுமய வெளிலசத்தா ம்ச
த்தானுற் சாட்சி யெங்கே, சித்தேசத் தாகு
மய வெளிற்சடமாஞ் சடங்களுக்குத் திதியு
மில்லை, ஒத்தேதோன் றியசத்துஞ் சித்து
நல்ல சுகமாகு மூகத் துக்கோர், வித்தேயங்
கியமாகிற் கடமசத்தாஞ் சுகாநுபவம்
விளைந்திடாதே. 141

வீயாத சத்துமுன்னம் விளங்குவது
தன்னாலோ வேறொன் றாலோ, வாயால்வே
றெனிலதுவு மசத்தோசத் தோவசத்தேன்
மலடி மைந்தன், பேயாகா ரியஞ்செயுமோ
சத்தெனவிப் படியதையும் பிரித்துச் சொ
ன்னால், ஓயாத வவத்தையாங் குதர்க்கவிகற்
பங்களைவிட் டொழிந்தி டாயே. 142

சுருதியுத்தி யொத்ததுபோ லநுபவ
முங் கேள்சுழுத்திச் சுகவா நந்தம், மிருதி
வடி வாதலிலவ் வாநந்த மேயறிவாம் வே
றங் கில்லை, கருதுபிர ளயஞ்சுழுத்தி யிரண்
டிலுநீ யிருந்திருளைக் காண்கின் றாயே, இரு
தயத்திப் படிநோக்கி யேகபரி பூரணமா
யிருந்தி டாயே. 143

பலகலையு முணர்ந்தகுரு மொழிந்தபடி
யிவனுமநு மவம்வி டாமல், பலமலரின்
மதுப்போலே சச்சிதா நந்தமொன்றாம் பர
மார்த் தத்தைப், பலபொழுதுங் கண்மூடிச்
சமாதியிருந் தான்விழித்து பார்த்தபோது,
பலவடிவாஞ் சராசரசித் திரங்களெலாந் தோ
ன்றுமொரு படமா னேனே. 144

இதயமொத்த சற்குருவே நமக்கிதுவே
விநோதமின்றி யினிவே றுண்டோ, அதை
யுரைத்து மதைநினைத்து மிருப்பதன்றோ
ஞானிகளுக் கான நீதி, முதலுரைத்த துரி
யாதீதமுமேழாம் பூமியுமுக் கியமாமென்ற,
பதமுமதின் வகையுமெனக் கெளிதாகத்
தெளியும்வண்ணம் பணித்திடீரே. 145

வினவுமிடத் தஞ்ஞான பூமிகளேழ்
ஞானபூ மிகளே ழென்பார், இனியவற்று
ளஞ்ஞான பூமிகளே ழையுமுந்தி யியம்பக்
கேளாய், தனிவித்துச் சாக்கிரஞ்சாக் கிரம
கா சாக்கிரஞசாக் கிரத்தைச் சார்ந்த, கநவு
கநாக் கநவுசாக் கிரஞ்சுழுத்தி யென்றெழு
பேர் கணித்தார் மேலோர். 146

மூந்தவகண் டத்தெழுமோ ரறிவுமாத்
திரமதுதான் முதல்வித் தாகும், இந்தவறி
விற்பண்டில் லாவகந்தை முளைபோலா மிது
நானாவாம், வந்துவந்து பிறவிதொறு மகம
மதை வளருமது மகாநானாவாம், நந்துமகங்
கொடுநனவின் மநோராச்சி யஞ்செயலே
நனாக்கநாவே. 147

உண்டுறங்கி மனோராச்சி யஞ்செயல்
சொப் பநமெனும்பே ருடைய தாகும், பண்
டுகநாக் கண்டுமறந் ததைமீண்டு நினைப்பது
சொப் பநநநாவாம், மண்டுமிருண் மூடுவது
சுழுத்தியா மஞ்ஞாந வகைகள் சொன்னோ
ம், விண்டுநிறை முத்திதரு ஞாநபூ மிகளே
ழும் விளம்பக் கேளாய். 148

புலவர்புகழ் முதற்பூமி சுபேச்சைவிசா
ரணையிரண்டாம் பூமி யாகும்,நலதநுமா நசி
மூன்றும் பூமிசத்து வாபத்தி நாலாம் பூமி,
சொலுமசம்சத் திப்பேரும் பதார்த்தாபா
வனைப்பேருந் துரியப் பேரும், மலிநமறு
மகனேயைந் தாறேழு பூமிகளா வகுத்தார்
மேலோர். 149

துர்ச்சங்க நிவிர்த்திவந்து சிவஞாநம்
விரும்புவது சுபேச்சை யாகும்,நற்சங்க மொ
ழிவினவி ஞாநநூல் பழகல்விசா ரணையா
நம்பி, முற்சங்க வேடணைகள் விடறநுமா
நசியிந்த மூன்றி னாலும், சற்சங்க மநதிலு
ண்மையறிவுதித்தல் சத்துவாபத்திதானே.

தத்துவத்தின் மருமுறைத்து மித்தை
யெலா மறத்தலசம் சத்தியாகும், அத்துவி
தானந்தம்வருந் திரிபுடி போம்பதார்த்தபாவ
னைய தாகும், வத்துநிலை யிருந்தபடி யிருந்த
மவு நசுபாவந் துரிய மாகும், இத்துரிய பூமி
யைமுன் றுரியாதீ தப்பதமென் றதுவுங் கே
ளாய். 151

மூற்புவிமூன் றினுமுலகந் தோன்றுத
லாற் சாக்கிரமா மூன்றற் கப்பால், சொர்ப்ப
நமா மதுவுமெள்ள நழுவுமைந்தாம் பூமியே
சுழுத்தி யாகும், அற்புதமாஞ் சுகாநுபவ
மிகுமாறும் புவிதுரிய மதற்கப் பாலோர்,
கற்பனையி லாதவிட மதீதமென்று மௌந
மாக் காட்டும் வேதம். 152

துரியநிலந் தனைத்துரியா தீதமெனின்
மயக்கமென்று கருதி மேலோர், அரியசொ
ரு விதேகமுத்திய தீதமென்பா ரதுகணக்கி
லாறும்பூமி,மருவுசுழுத் தியிற்காட்சி சுழுத்
தியென்பா ரென்பதுநீ மநத்திற் கொள்வா
ய், பெருமைதரு ஞாநபூ மியின்விகற்ப
மின்னமுண்டு பேசக் கேளாய். 153

முன்னிலங்க ளேறியமூ வருமப்பி யாசி களாமுத்த ரல்லர், பின்னிலங்கள் வரன்வரி யான் வரிட்டனெனுஞ் சீவன்முத்தர் பேத மாகும், சொன்னநவப் பூமிவந்த ஞானிகளே பிரமவித்தாந் தூய முத்தர், இன்னமுமப் பூமிகளின் பெருமைதனை நீயறிய யான்சொல் வேனே. 154

நாலாம்பூ மியல்வருமுன் மூன்றுபூ மியுமடைந்து நடந்து மாண்டோர். மேலான பதமடைந்து பிறந்துமெள்ள மெள்ளவந்து வீடுசேர்வார், மாலான பவத்தில்விழார் முதற்பூமி கிடைப்பதுவே வருத்த மைந்தா, காலான முதற்பூமி கைவந்தான் முத்தியுங்கை வந்த தாமே. 155

இப்புவியி விஞ்ஞான பூமியொன்றி விரண்டிலடைந் திருந்தா ராலும், அப்புருடர் மிலேச்சரா கிலுமுத்தர் குருபாதத் தாணை மெய்யே, தப்புரையென் றவர்கெடுவார் நடுவான மறைகளேநீ சங்கி யாதே, செப்புமொழி வழிதிடமா யகம்பிரம மென்றிருந்து தெளிந்தி டாயே. 156

பேரில்லாத மிலேச்சருக்கும் விதேக முத்தி தருஞான பூமி யென்று, நெல்லாகி முளைக்குமெனைத் தண்டுலமாக் கியகுருவே நீர்சொன் னீரே, இல்லாளுங் குடும்பம்விட் டுச் சந்நியா சம்புகுந்தே காங்கி யானோர், அல் லாமன் முத்திபெறு ரென்றுசிலர் சொலு மயக்க மகற்று வீரே. 157

சிட்டர்புகழ் மகனேநீ சங்கித்த சங்கை நன்று தெரியக் கேளாய், கட்டழியுந் துறவு நால் வகையாகு மவைகளுக்கங் காகும் பேர் கள், பட்ட துயர் கெடுங்குடீ சகம்வெகூ தக மம்சம் பரம வம்சம், விட்டகலுந் துறவுக்கு விராகங்கா ரணமன்றி வேட மன்றே. 158

மந்தமுந்தீ விரமுந்தீ விர தாமு.மென மூன்று வகைவி ராகம், வெந்துயரம் வரும் பொழுது குடும்பத்தைவெறுத்துவரும்விரா க மந்தம், இந்தவுட லளவுமனை தரம்வேண் டா மெனவிடநீ விரமென் பார்கள், அந்த ணனூர் மித்தையென விடலது தீவிர தரமா மறிந் திடாயே. 159

பாவிமந்த விராகத்திற் சந்நியா சங்க ளொன்றும்பலித்திடாதே, தீவிரத்திற் குடீசகமும் வெகூதகமு மென்றிரண்டு திறங்க ளுண்டாம், தாவிநடந் திடத்திடமிலா தவர்க் குக் குடீசகமுஞ் சகங்க ளெங்கும்; மேவிநடந் திடத்திடமுள் ளவர்க்குவெகூ தகமுமென விதித்தார் மேலோர். 160

இருவகைதீ விரதரத்து மம்சனென் றும் பரமாம்ச னென்றுஞ் சொல்வர், வரு மம்ச னுக்குமுத்தி சத்தியலோ கத்தன்றி வாரா தென்பார், பரமாம்ச னுக்குமுத்தி யிவ்வுலகின் ஞானத்தாற் பலிக்கு மென்பார், திரமருவும் பரமாம்சன் ருனுமிரு வகையா செப்பக் கேளாய். 161

சிஞ்ஞாசு ஞானவா னென்றிரண்டு பேர்களவ ரிற்சிஞ் ஞாசு, மெய்ஞ்ஞான பூமியின் மூன் மூன்றபூ மியு ளடக்கும் விவேகி யானேன், சுஞ்ஞான வானென்போன் சீவந் முத்தி யடைந்திருக்குந் தூய மேலோன், அஞ்ஞான மகலுமந்தச் சிஞ்ஞாசு மிருவகை யா மதுவுங் கேளாய். 162

பந்தமனே துறந்துசில ரதிதிகளா யிருந் தடைவர் பரம ஞாநம், அந்தணர்மன் னவர் வணிகர் சூத்திரரா யிருந்துசில ரடைவர் ஞாநம், இந்தவகைச் சாத்திரத்து மூலகத்து நடப்பதுகண் டிருந்து மைந்தா, சிந்தனேயின் மயக்கமென்னே சுருதியுத்தி யநுபவத்தாற் றெளிந்தி டாயே. 163

பிறந்ததண் டானு லன்றோ பிறகுசாவது தா னுண்டாம், பிறந்ததே யில்லை யென்னும் பிரமமா வதுவு நானே, பிறந்தது நானென் றுகிற் பிரமமன் றந்த நானே பிறந்தது மிறந்த தற்ற பிரமமா நானே, நானே.

நானென்ற பிரம மான நானேநா னறியே னென்றால், நானென்ப தேது பின்னை நம்முடைப் புந்தி யென்னில், தானது மயக்கந் தன்னிற் சாகுமே சாவா தாகி, நானென நிறைந்திருந்த ஞாநமா நானே நானே. 165

நிறைந்தவா றெந்த வாறு நிலைதெரிந் திலனென் றுயேல், அறிந்ததாஞ் சுழுத்தி தன்னிலாநந்த மதுவே யாகும், குறைந்ததற்

காரங் தந்தான் குவலயந் தன்னி லில்லை, நிறைந்ததே யிந்த வாங்மா நிதாரமிவ் வறிவு தானே. 166

மநத்தினு லெண்ணித் தானே வந்த திவ்வுலக மாகும், தினைத்திடி லநேக லோக நிற்பதவ் வறிவி லன்றோ, அனைத்தையுங் கடந்தப் பாலு மந்தமற் றறிவி தாமென், றெனைத்தனி விசாரித் திட்டா லேகமாய் நிறைந்தோ னுனே. 167

அந்தவா றிருந்து கொண்டே யாநந்த மநுப விக்க, எந்தவா றிருந்து கொண்டா லெனக்கிது தெரியு மென்னில், இந்தமூன் றவஸ்தை தம்மு ளெழுந்திடும் விருத்தி நீக்கில், அந்தவா றிருந்து நீயு மாநந்த மடைய லாமே. 168

வாதநா வசத்தி னலே வருகிற விருத் தி யெல்லாம், எதினு லடக்க லாகு மென்று தான் விசாரஞ் செய்யில், போதமா மிராசன் றனுப் புத்தியைப் புலன்க ளெல்லாம், தா

தரா யிருக்கப் பெற்றாற் சகலமு மடங்குந் தானே. 169

விருத்திக ளடக்க வின்னம் விநோத மாம் யோகத் தாலே, தருத்திபோ லூது மூச்சைச் சுகமூட னடக்கி னிற்கும், கருத் ததற்கில்லை யென்னிற் காரண சரீர மாகிப், பெருத்ததோ ரவித்தை தன்னைப் பிடுங்கிடி லடங்குந் தானே. 170

காரண சரீரந் தன்னைக் களைவதெவ் வாறென் றோதில், ஆரணம் பொய்சொல் லாதே யதன்பொரு ளகத்தி லுய்த்துப், பூர ண மாகும் மென்மேற் புவனங்க ளேற்ற மென்று, தாரணை வந்த தாகிற் றரிந்திடு மவித்தை யெங்கே. 171

அப்படி யிருக்கச் சித்த மலைதலால் விவ காரத்தில், எப்படி கூடுமென்னி லென்னை விட் டொன்று மில்லை, இப்படி கண்ட மவ ல்லா மென்மய மென்க நாப்போல், கற்பித மென்று தானே காண்கின்ற சித்து நானே.

சித்துநா னிறைந்தோ னென்ற திடமறவா திருந்தால்,எத்தனை யெண்ணி னாலு மேதுசெய் தாலு மென்ன, நித்திரை யுணர்ந்த பின்பு நிற்கின்ற கனாவே போல. அத்தனை யும்பொய் தானே யானந்த வடிவு நானே. 173

நானென வுடலைத் தானே நம்பினே னநேக சன்மம், ஈனராய்ப் பெரியோ ராகி யிருந்தவை யெலாமிப் போது, கானலில் வெள்ளம் போலக் கண்டேசற் குருவி னாலே, நானென வென்னைத் தானே நம்பிவீ டேறி னேனே. 174

என்னபுண் ணியமோ செய்தே னேது பாக்கி யமோ காணேன், நன்னிலந் தனிலெ ழுந்த நாரணன் கிருபை யாலே, தந்நிய னேன் னுந் தரீயத்தை வீசு கின்றேன், தந்நிய னின்னு நானே தாண்டவ மாடு கின்றேன். 175

தத்துவ ஞானம் வந்த சந்தோட வதிசயத்தால், நித்தமா டுவன்கா ணென்ற நிலை

முன்ன மேய றிந்த, சத்திய மதனு லன்றோ
தாண்டவா வென் றழைத் தார், அத்தனை மகி
மை யுள் ளோ ரன்னையும் பிதாவுந் தாமே.

வந்ததோ ரிவ்வா நந்த மகிழ்ச்சியா ருடன்
சொல் வேன்யான், சிந்தையி லெழுந்து பொ
ங்கிச் செகமெலா நிறைந்து தேங்கி, அந்த
மில் லாத தாயிற் றப்படிக் குருவே தாந்த,
மந்திர மருளு மீசன் மலரடி வணங்கி
னேனே. 177

வித்தியா நந்த மிந்த விதமென விளம்
பினேமே, பத்தியா லிந்த நூலைப் பார்த்தநு
பவித்த பேர்கள், நித்திய தரும நிட்டை நிலை
தனை யறிந்து சீவந், முத்தியை யடைந்தி
ருந்த முனிவர ராகு வாரே. 178

ஆரணப் பொருளாம் வித்தி யாநந்தம்
விளங்க வேதும், காரணங் குறைவி லாமற்
கைவல்யநவநீ தத்தைப், பூரண மாக்க வேண்
டிப் பூர்வமா நன்னி லத்தில், நாரண குருந
மக்கு நவின்றனர் யோகில் வந்தே. 179

தூலவுசற் குருவின் பாதக் குளிர்புனற்
றலைமேற் கொண்டால், உலகினிற் றீர்த்த
மெல்லா முற்றபே றடைவார்போல, நலமை
யா குங்கை வல்ய நவநீத நூலைக் கற்றோர்,
பலகலை ஞான நூல்கள் படித்தஞா னிகளாய்
வாழ்வார். 180

சந்தேகந் தெளிதற் படலம் முற்றிற்று.

கைவல்ய நவநீதம் முற்றுப் பெற்றது.

படலம் இரண்டிற்குச் செய்யுள் 281.

பாயிரச் செய்யுள் 7, மொத்தம் செய்யுள் 288

சர்வஞ் சிந்மயம்.